# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்


| | | | |
|---|---|---|---|
| மலர்:5 | இதழ்: ௰ | ஜூலை : 2021 | ரூ.10/- |
| Volume:5 | Issue: 10 | July : 2021 | Rs.10/- |






**SHRI MAHA MERU MANDALI TRUST**
Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

கொரோணா இரண்டாவது அலையில் மனித இனம் அல்லல் பட்டுக்கொண்டுள்ளது. நமது சனாதன தர்மத்தில் இது போன்ற உற்பாதங்களின் போது இறைவனைத் துதித்து நிவர்த்தி பெற பல உபாயங்களை நம் முன்னோர்களான ரிஷிகளும் முனிவர்களும் சித்தர்களும் வழங்கியுள்ளனர். அவற்றில் குறிப்பிட்ட உபாயங்களை தற்கால ஸ்ரீ குருமார்கள் தேர்வு செய்து மக்களுக்கு தெரியப்படுத்தி வழி நடத்துகின்றனர்.

அந்த வகையில் ச்ருங்கேரி சாரதா பீடாதிபதிகள் "நம:சங்கராய" என்ற மந்திரத்தை ஒவ்வொரு நாளும் 1000 தடவை ஜபம் செய்ய அறிவுருத்தியுள்ளனர்.

சென்னை ஸ்ரீ மஹா மேரு மண்டலியின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் லோகக்ஷேமத்திற்காக கீழ்க்கண்ட பாராயணங்களை தினந்தோரும் பாராயணம் செய்து இந்த குழுமத்தில் பதிவிடுமாறு அறிவுருத்தியுள்ளார்கள்.

1. ஓம் நம : சங்கராய (ஒரு மணி நேர ஜபம்)
2. ராகவ யாதவீயம் (ஒரு முறை)
3. ச்யாமளா தண்டகம் (ஒரு முறை)
4. ஸ்ரீ சாகம்பரி ஸஹஸ்ரநாமம் (ஒரு முறை)
5. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (ஒரு முறை)

ஸ்ரீராகவ யாதவீயமும் ஸ்ரீ ச்யாமளா தண்டகமும் மண்டலியால் வழங்கப்பட உள்ளது.

அதுவரை ஏனைய ஜபத்தையும் பாராயணங்களையும் இன்று முதல் தொடர்ந்து செய்யுமாறு ஸ்ரீ மஹா மேரு மண்டலி அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

லோகக்ஷேமத்திற்கான நம் பங்கை ஆற்றுவோம் வாருங்கள்.

ஸ்ரீ மஹா மேரு மண்டலி.

மேலும் விபரங்களுக்கு :

**ஸ்ரீமதி இந்திரா பாலாஜி, 94440 60346**

# வேதபாரதி
## செய்திகள்



காயத்ரீ தேவி

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 22

**சரீரம் மே விசர்ஷணம் | ஜிஹ்வா மே மது$^{4}$மத்$^{1}$த$^{1}$மா |**
**க$^{1}$ர்ணாப்$^{4}$யாம் பூ$^{4}$ரி விச்ருவம் ||**

**- தை$^{1}$த்$^{1}$தி$^{1}$ரீயோப$^{1}$நிஷத்**
**(1-4-1)**

**பொருள் :**

*என் இந்த சரீரம் ஆரோக்யமாக இருந்து ஆத்மஞானத்தை பெறுவதற்கு யோக்கியமாகட்டும்; என் நாக்கு தேனைப் போல் இனியதாகட்டும்; இரு காதுகளினாலும் நான் ப்ரம்ம விசாரத்தை அதிகமாகக் கேட்கும்படியாகட்டும்.*

*ஆத்மஜ்ஞானம் தான் மனிதப் பிறவி எடுத்ததன் பயனாகும். ஆரோக்யமாக இருப்பது விஷய போகத்திற்காக அல்ல; ஞான ப்ராப்திக்காக.*

*|| ஓம் சாந்தி: சாந்தி : சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 5 இதழ்: 10

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**

27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்

**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**

39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட

**VEDABHARATHI**
City Union Bank,
Velachery Branch
A/c No. 510909010005286
IFSC : CIUB 0000262

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org


## புத்தகத்தின் உள்ளே


ஒரு நிமிடம் உங்களோடு... 5
வைகாசி மாத விசேஷங்கள் 6
அட்டைப்பட விளக்கம் 9
ஸ்ரீமத் பகவத்கீதை 12
நாலடியார் 14
ஸ்ரீமத் பாகவதம் 15
மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள் 18
கல்லிலே கலை வண்ணம் கண்டான் 19
தர்மத்தின் குரல் 27
சிருங்கேரி மஹா சுவாமிகள் 28
பெற்றோர்களே கவனியுங்கள் 29
பாரத தேசப் புனித யாத்ரை 33
சாதனைப் பறவைகள் 37
பதினெண் புராணங்கள் 40
பசு சர்வரோக நிவாரணி 42
புரோஹிதர் 44



**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய
சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

புத்தக வடிவமைப்பு :

**ரெம்ஸ் பிரிண்டஸ்**

நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

# ஒரு நிமிடம் உங்களோடு.....................
# ஆணவம்

*குருக்ஷேத்திரப்போர் முடிந்ததும் அந்தக் கால முறைப்படி யுதிஷ்டிரரின் தேர்பாகன், பீமனின் தேர்பாகன் என்று எல்லோருடைய தேர்பாகன்களும் அவரவர்கள் தேரிலிருந்து கீழே இறங்கி, தேரை வலம் வந்து தரையில் மண்டியிட்டு நின்றார்கள். அடுத்து அர்ஜுனனின் தேர், தேரோட்டியான பகவான் கிருஷ்ணரும், அர்ஜுனனும் தேரில் அமர்ந்திருந்தார்கள். பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனைப் பார்த்து* **“அர்ஜுனா போர் முடிந்துவிட்டது, நாமும் வெற்றி பெற்றுவிட்டோம் நீ உடனே தேரை விட்டு கீழே இறங்கு”** *என்றார். ஆனால்* **“அர்ஜுனன்”** *தேரிலிருந்து இறங்காமல், கிருஷ்ணன் நம்முடைய தேர்பாகன்தானே அவரே என் கரம் பற்றி தேரை விட்டு கீழே இறக்கி விடட்டும் என்ற ஆணவத்துடன் தேரிலேயே அமர்ந்திருந்தான். அவன் ஒரு கணம் அறிவு மழுங்கி ஆணவம் மேலிட நின்றான்.*

*அடுத்தவர் மனம் என்ன நினைக்கிறது என்பது கண்ணனுக்குத் தெரியாதா? பகவான் கிருஷ்ணர் விநாடிப்பொழுது கூட தாமதிக்காமல் அர்ஜுனனின் கரம் பிடித்து இழுத்து தேரிலிருந்து கீழே பூமியில் தள்ளினார். அடுத்த விநாடி தேரின் உச்சியில் பறந்துகொண்டிருந்த* **“அனுமன் கொடி”** *கீழே விழுந்தது, கண்ணனும் தேரைவிட்டு கீழே குதித்தார், அடுத்த கணம் தேர் தீப்பற்றி திகு திகு வென எரிந்தது.*

*அர்ஜுனன் மலைத்துப்போய், “தேர் ஏன் எரிந்தது? என்று ஏதும் புரியாமல் கேட்டான். பகவான் அர்ஜுனனை நோக்கி* **“அர்ஜுனா பிதாமகன் பீஷ்மர், துரோணாச்சாரியார் போன்றவர்களின் மந்திர அஸ்திரங்கள் எல்லாம் நம்முடைய தேரில் குத்திட்டு நிற்கின்றன, நான் சாரதியாக அமர்ந்திருந்த காரணத்தினாலும், அனுமன் கொடி பறந்ததாலும் அவை பலனற்று இருந்ததோடு உன்னையும் ஒன்றும் செய்யவில்லை. நான் முதலில் தேரைவிட்டு இறங்கியிருந்தால் அந்த அஸ்திரங்கள் சக்தி பெற்று உன்னையும், தேரையும் எரித்துவிட்டிருக்கும். இதனை நினைத்துத்தான் உன்னை முதலில் தேரைவிட்டு இறங்கச்சொன்னேன். உன்னைக் காக்கவே நான் சம்பிரதாயச் சடங்குகளை மீறினேனே தவிர தேரோட்டியின் கடமையைச் செய்யத் தயங்கியதால் அல்ல. ஆனால் நீயோ வெற்றியின் மமதையால் தேரோட்டியான நான் உன் கரம் பற்றி தேரைவிட்டிறக்க வேண்டும் என ஆணவம் கொண்டாய். உன்**

**ஆணவம் உயிரையே பறித்திருக்குமே. இனி உன் வாழ்நாளில் எப்போதும் ஆணவம் கொள்ளாதே”** என்று கூறி ஆசிர்வதித்தார்.

தன்னுடைய அகந்தையையும், அறியாமையையும் எண்ணி வெட்கித் தலைகுனிந்த அர்ஜுனன், கண்ணனின் கால்களில் விழுந்து வணங்கினான். பகவான் கண்ணனும் அவனை வாரியணைத்துக்கொண்டார்.

ஆகவே நாமும் நம்முள் ஆணவம் என்கின்ற தீய எண்ணத்தை அறவே நுழையவிடாமல், அனுதினமும் பகவானை நினைத்து வாழ்வோமாக. **டி. சூரியநாராயணன்.**

## ப்லவ வருஷம் - ஆடி மாத விசேஷங்கள்

### (ஜுலை 17.07.2021 முதல் ஆகஸ்ட் 16.08.2021 வரை)

| | | | |
|---|---|---|---|
| 17.07.2021 | ஆடி 1 | சனி | ஆடிப்பண்டிகை |
| 20.07.2021 | ஆடி 4 | செவ்வாய் | ஏகாதசி |
| 21.07.2021 | ஆடி 5 | புதன் | பிரதோஷம் |
| 23.07.2021 | ஆடி 7 | வெள்ளி | பௌர்ணமி |
| 24.07.2021 | ஆடி 8 | சனி | வ்யாஸ பூஜை |
| 27.07.2021 | ஆடி 11 | செவ்வாய் | சதுர்த்தி |
| 30.07.2021 | ஆடி 14 | வெள்ளி | சஷ்டி |
| 02.08.2021 | ஆடி 17 | திங்கள் | ஆடிக்கிருத்திகை |
| 03.08.2021 | ஆடி 18 | செவ்வாய் | 18-ம் பெருக்கு |
| 04.08.2021 | ஆடி 19 | புதன் | ஏகாதசி |
| 05.08.2021 | ஆடி 20 | வியாழன் | பிரதோஷம் |
| 08.08.2021 | ஆடி 23 | ஞாயிறு | அமாவாசை |
| 11.08.2021 | ஆடி 26 | புதன் | ஆடிப்பூரம் |
| 12.08.2021 | ஆடி 27 | வியாழன் | சதுர்த்தி |
| 15.08.2021 | ஆடி 30 | ஞாயிறு | சுதந்திரதினம் |

## 08.08.2021 ஞாயிற்றுக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ ப்லவ நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே க்ரீஷ்ம ருதௌ கடகமாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ பானு வாஸரயுக்தாயாம் புஷ்ய நக்ஷத்ர யுக்தாயாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ அமாவாஸ்யா புண்யகாலே தர்ஸ ஸ்ராத்தம் ப்ரதிநிதி தில தர்ப்பணம் அத்ய கரிஷ்யே.

## 06.07.2021- செவ்வாய் – ஸ்ரீகூர்ம ஜயந்தீ



பகவான் மஹாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களில் இரண்டாவது அவதாரம் **"கூர்ம அவதாரம்"**. (ஆமை வடிவில்) இந்த அவதாரத்தில் மட்டும் பகவான் தீயவர்களை அழிக்காமல் பலருக்கும் நன்மையைக் கொடுத்து, பல பொருட்களை தோற்றுவித்து நற்பலனை கொடுத்தார், இந்த அவதாரம் கிருத யுகத்தில் நடைபெற்றது. கூர்ம அவதாரம் நிகழ்ந்த நாளே **"கூர்ம ஜயந்தி"** என்று கொண்டாடப்படுகிறது. ஆனி மாதம் கிருஷ்ணபட்சத்தில், அதாவது தேய்பிறை துவாதசி திதியில் திருமால் கூர்ம அவதாரம் எடுத்ததாக புராணங்கள் கூறுகின்றன.

பக்தர்களுக்காக பாரம் சுமந்து பாதுகாத்த கூர்ம பகவானை **"கூர்ம ஜயந்தி"** அன்று ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ஸ்தோத்திரங்கள் அல்லது கீழ் உள்ள கூர்ம காயத்ரி மந்திரத்தை பலமுறைஜபித்து கூர்ம பகவானை வணங்கி வளம் பெறுவோம்.


**ஓம் தராதராய வித்மஹா**
**பாசஹஸ்தாய தீமஹி**
**தன்னோ கூர்ம ப்ரசோதயாத்**

## 15.07.2021 வியாழன் ஆனித் திருமஞ்சனம்



அபிஷேகப்பிரியர் சிவன்! அலங்காரப்பிரியர் விஷ்ணு! இது முதுமொழி **"திருமஞ்சனம்"** என்றால் மஹாபிஷேகம் (மஹா அபிஷேகம்) என்று பொருள். ஆனித்திருமஞ்சன விழா முதன் முதலில் பஞ்ச பூத ஸ்தலங்களில் ஆகாயத்தைக் குறிக்கும் சிதம்பர ஸ்தலத்தில்தான் தோன்றியது. ஆனி திருமஞ்சனம் ஆடலரசனான நடராஜ பெருமானுக்குரிய நாளாகப் போற்றப்படுவதால் எல்லா சிவாலயங்களிலும் ஆனித் திருமஞ்சனம் விழாவாகவே கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் முறைப்படி விரதம் இருந்து சக்தி உள்ளவர்கள் தில்லை சென்று ஸ்ரீ நடராஜரை தரிசிக்கலாம். முடியாதவர்கள் அருகில் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று மனமுருக வேண்டி ஆடலரசனின் அருளைப் பெறலாம்.

## 24.07.2021-சனிக்கிழமை—வியாச பூஜை-குரு பூர்ணிமா



ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில் வரும் பௌர்ணமி அன்று சீடர்கள் தங்களுக்கு கல்வி அறிவு புகட்டிய தங்களுடைய குருவை போற்றும் விதமாக அவர்களுக்கு குரு பூஜை செய்வார்கள். ஆசிரமத்தில் இருக்கும் சன்னியாசிகள் இந்நாளில் தாங்கள் ஞானத்தை பெற்றதற்கு நன்றியை வெளிப்படுத்தும் வகையில் **வியாச பகவானை** ஆராதித்து பூஜை செய்வார்கள். ஆகையால் இதை **வியாச பூஜை** என்றும் **குரு பூர்ணிமா** என்றும் அழைப்பார்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் ஸ்வரூபமான ஸ்ரீ வேதவ்யாஸர் துவாபரயுகம் முடிவிலும் கலியுகம் ஆரம்பம் ஆவதற்கு முன் அவதரித்தவர் என்று புராணங்கள் கூறுகின்றன, ஒரே வடிவாக இருந்த வேதத்தை ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம் என்று நான்காக பிரித்து உலகுக்கு ஈந்தவர், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அருளிய கீதையைத் தொகுத்தவர். ஸ்ரீ மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் முதலிய பதினெட்டு புராணங்களை இயற்றியவர் எல்லா ஸன்யாசிகளுக்கும் இவர்தான் குரு. அப்படிப்பட்ட இந்த ஸ்ரீவேதவ்யாஸ மஹரிஷியை ஒவ்வொருவரும் **குரு பூர்ணிமா** தினமான இன்று பூஜை செய்ய வேண்டும். முடியாதவர்கள் கீழ்கண்ட ஸ்லோகங்களைச் சொல்லி நமஸ்கரிக்கலாம்.

**வ்யாஸம் வஸிஷ்ட நப்தாரம் ஸக்தே: பௌத்ர மகல்மஷம் /**
**பராஸராத்மஜம் வந்தே ஸுகதாதம் தபோநிதிம் //**

## வாசகர் கடிதம் :

1. வேதபாரதி செய்திகள் கொரோனா காலத்திலும் வந்து சேர்ந்தது. ஆன்லைன் வகுப்புகள் பிரமாதம். பிரதி புதன் கிழமை சொற்பொழிவு அருமை. **ஸ்ரீநிவாசன், திருச்சி.**

2. ஸ்ரீமத் பாகவதம் - பக்கம் 20 ல் துந்துகாரியைப்போல ஸ்ரீமத் பாகவதத்தை கேட்க பிரார்த்தனை செய்கிறேன்.

**லட்சுமி, அம்பத்தூர்.**

3. புதுமைகள் புகுத்தும் பெண்மையைப் போற்றுவோம் முயற்சி பாராட்டுக்குரியது. **காயத்ரீ ராகவன், நங்கநல்லூர்.**

# அட்டைப்பட விளக்கம்

## லோகமான்ய பால கங்காதர திலகர்

**(23.07.1856 – 01.08.1920)**

**"பால கங்காதர திலகர்"** என்று அழைக்கப்படும் **"லோகமான்ய பால கங்காதர திலகர்"** அவர்கள் இந்தியத் தேசியவாதி, விடுதலைப் போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி. இந்தியாவிற்கு முதன் முதலில் தன்னாட்சி கோரியவர்களில் திலகரும் ஒருவர்.

இவர் மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள **"ரத்னகிரி"** என்ற ஊரில் 1856ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் நாள் திரு கங்காதர் ராமச்சந்திரா திலக், பார்வதி பாய் கங்காதரர் தம்பதியருக்கு மகனாக சித்பவன் பிராமணக் குலத்தில் பிறந்தார். சிப்பாய் புரட்சி எனப்படும் முதல் சுதந்திரப்போர் ஏற்படுவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னர் பிறந்தார். பெற்றோர் குழந்தைக்கு **"கேசவ் கங்காதரதிலக்"** என பெயர் சூட்டினர். திலகரின் தந்தை சம்ஸ்கிருதத்தில் புலமை பெற்ற ஆசிரியர். திலகர் தன்னுடைய பத்து வயது வரையிலும் ரத்னகிரியில் படித்தார். அதன்பின் அவரது தந்தை பணி காரணமாக புனேவுக்கு இடம் பெயர்ந்ததால் திலகர் தன்னுடைய கல்வியை அங்கே தொடர்ந்தார்.

திலகர் தம்முடைய பத்தாவது வயதில் தன் தாயையும் பதினாறாவது வயதில் தன் தந்தையையும் இழந்தார். அதன்பின் அவருடைய சித்தப்பா கோவிந்தராவும் சித்தி கோபிகாபாயும் திலகரை அன்புடன் வளர்த்தனர். அவருடைய தாயார் திலகரை "பால்" என்று அன்போடு அழைப்பார். தாயார் நினைவாகவே திலகர் தனது பெயரை **"பால் கங்காதர திலக்"** என்று வைத்துக்கொண்டார். திலகருக்கு 1871ஆம் ஆண்டில் அவருடைய 15வது வயதில் **"சத்யபாமா"** என்ற 11 வயது சிறுமியை திருமணம் செய்த வைத்தனர்.

கணிதத்திலும் ஸம்கிருதத்திலும் சிறந்து விளங்கிய திலகர் 1877 ஆம் ஆண்டில் புனேவில் உள்ள டெக்கான் கல்லூரியில் இளங்களைப் பட்டம் பெற்றார். அவருடைய தகுதியை அறிந்த கல்லூரி முதல்வர் திலகரை கணிதத்தை சிறப்பு பாடமாக எடுத்து மேலும் படிக்கும்படி கூறினார். ஆனால் திலகர் "என்னுடைய

*நாடு அடிமைப்பட்டு துன்புற்றுக்கிடக்கிறது. சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபடுவோர் அடிக்கடி கைது செய்யப்பட்டு சிறையில் வாடுகின்றனர். அவர்களுக்காக வாதாடி அவர்களை காப்பாற்றவேண்டும் எனவே நான் சட்டம் படிக்க விரும்புகிறேன்" என்று கூறி 1879ல் சட்டப்படிப்பை முடித்தார். தான் நினைத்ததுபோலவே பல தேச பக்தர்களுக்காக வாதாடி அவர்களைச் சிறையிலிருந்து மீட்டார். 1881ஆம் ஆண்டு தன்னுடைய நண்பர்கள் கோபால், கணேசு அகர்கர், விஷ்ணு சாஸ்திரி, சிப்லுனாக்கர் ஆகியோருடன் சேர்ந்து* **"கேசரி"** *என்ற மராட்டிய மொழிப் பத்திரிகையையும் "மராட்டா" என்னும் ஆங்கில பத்திரிகையையும் தொடங்கினார். அதன்மூலம் ஆங்கில அரசிடம் நாட்டு மக்கள் படும் துன்பங்களை வெளிச்சம்போட்டு காட்டினார். இந்த பத்திரிகைகள் ஒவ்வொரு இந்தியனையும் தமது உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடும்படி தூண்டின.*

*1889 ஆம் ஆண்டில் திலகர் இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்தார். சுவாமி விவேகானந்தர் 1892 செப்டம்பரில் ரயிலில் மும்பையிலிருந்து புனேவிற்கு பயணம் செய்தபோது திலகரும் அவருடன் சக பிரயாணியாக வந்தார். பின்னர் சுவாமி விவேகானந்தர் திலகர் இல்லத்தில் 10 நாட்கள் தங்கியிருந்தார்.*

*1893ஆம் ஆண்டில் விவேகானந்தரின் சிகாகோ உரை திலகரை மிகவும் கவர்ந்தது. 1896ல் பம்பாய், புனேயில்* **"பிளேக் நோய்''** *பரவியபோது நிவாரணப் பணிகளில் அயராது ஈடுபட்டார். மக்களைக் காப்பாற்ற எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த இரக்கமற்ற ஆங்கில அரசு விக்டோரியா மஹாராணியின் வைர விழா கொண்டாட்டத்தில் ஈடுபட்டது. திலகர் இதை எதிர்த்ததோடல்லாமல் கண்டித்து தனது பத்திரிக்கையிலும் எழுதினார். இந்தக் கட்டுரைகளை காரணம் காட்டி ஆங்கில அரசு அவரை 1987ல் சிறையில் அடைத்தது. 12 மாத சிறைதண்டனை முடிந்து வெளிவரும்போது மிகுந்த மக்கள் செல்வாக்கு பெற்ற தலைவராக வெளிவந்தார். அதனால் அவருக்கு* **"லோகமான்ய"**, *அதாவது மக்களால் விரும்பப்படும் தலைவர் என்னும் அடைமொழி கிடைத்தது.*

*தேசம் முழுவதும் ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான மனநிலையை*

உருவாக்கவும், தேசியவாத இயக்கம் பரவவும் மக்களை ஒன்று திரட்டவும் பொது இடங்களில் **"விநாயகர் சதுர்த்தி"** வழிபாட்டையும் வீர சிவாஜியின் பிறந்த நாளையும் கொண்டாடினார்.

சுதந்திர போராட்டத்தில் தீவிரம் காட்டிய திலகர் 1898 ஆம் ஆண்டு சென்னையிலும், 1899 ஆம் ஆண்டு லக்னோவிலும் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். தனது பத்திரிகையில் இளம் புரட்சியாளர்களை ஆதரித்து எழுதினார். அது மட்டுமல்லாமல் வ.உ.சி கைது செய்ததையும் எதிர்த்து கண்டன குரல் எழுப்பினார். இதற்காக திலகரை கைது செய்த ஆங்கில அரசு அவரை தண்டித்து ஆறு ஆண்டுகள் பர்மா மாண்ட்லே (தற்போதைய மியான்மர்) சிறைக்கு அனுப்பியது. சிறையில் திலகர் **"கீதா ரகசியம்"** என்ற நூலை எழுதினார். அவர் சிறையில் இருந்தபோது அவரது மனைவி இறந்தார். 16.06.1914 அன்று விடுதலை அடைந்தார்.

ஆங்கில ஆட்சியை எதிர்த்து தீவிரமாகப் போராடி **"சுதந்திரம் என்னுடைய பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்"** என்று முழங்கிய திலகர் தன்னுடைய இறுதிகாலம் வரை தன்னுயை நாடு விடுதலையாகவேண்டும் என்று போராடிய பால கங்காதர திலகர் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 1920 ஆகஸ்ட் 1-ம் தேதி தன்னுடைய 64ம் வயதில் இறைவனடி சேர்ந்தார். அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த பம்பாயில் சுமார் இரண்டு லட்சம்பேர் கலந்துகொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

1908ஆம் ஆண்டு பாலகங்காதரர் நினைவாக சென்னை மெரினா கடற்கறையில் சென்னை மாநில கல்லூரி எதிரில் **"திலகர் திடல்"** உறுவானது. இந்த பெயரை சுப்பிரமணிய சிவா முன்மொழிந்தார். சுப்பிரமணிய பாரதி வழி மொழிந்தார்.

23.07.2021 வியாழக்கிழமை **"லோகமான்ய பால கங்காதர திலகர்" அவர்களின் பிறந்த தினம். இவரைப் போன்ற சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தால்தான் இந்திய மக்களாகிய நாம் சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நாளில் நாம் திலகரை நினைவு கூர்வோம்.**

**டி.சூரியநாராயணன்.**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,

ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 27



## அத்தியாயம் – 2
## ஸாங்கிய யோகம்

*சென்றமாதம் ஸ்லோகங்கள் 16 முதல் 20 வரையிலும் விளக்கம் பார்த்தோம் இனி தொடர்ந்து பார்ப்போம்.*

*ஸ்லோகம் 21ல் பகவான் அர்ஜுனனிடம் 'பார்த்தா, இந்த ஆத்மாவை அழியாதது, மாறாதது, பிறவாதது, குறையாதது என்று அறிபவன் எப்படி யாரைக் கொல்வான்? யாரைக் கொல்விப்பான்? என்று கேட்கிறார். அடுத்த ஸ்லோகம் மறு பிறப்பை குறிக்கிறது. ஆத்மாவுக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு யாது? என்பதை பகவான் விளக்குகிறார்.*

**வாஸாம்ஸி ஜீர்ணாநி யாத$^{2}$ விஹாய**
**நவானி க்ருஹ்ணாதி நரோபராணி |**
**ததா$^{2}$ ஸரீராணி விஹாய ஜீர்ணான்**
**அந்யாநி ஸம்யாதி நவாநி தே$^{3}$ஹீ ||** *(கீதை 2-22)*

**பொருள் :** *பழுதுபட்ட துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதிய துணிகளை போட்டுக்கொள்வது போன்று ஆத்மா பழைய உடல்களை நீத்துவிட்டு புதியன புகுகிறது.*

*13வது ஸ்லோகத்திற்கான பொருளும் இந்த ஸ்லோகத்திற்கான பொருளும் ஒன்றுதான்.*

*இந்த 22ஆவது ஸ்லோகத்தில் பகவான் நமக்கு வாழ்க்கையைக் குறித்தும், மரணத்தைக் குறித்தும் மிகவும் அழகாக விளக்குகிறார். இது எல்லாரும் மனப்பாடம் செய்ய வேண்டிய ஸ்லோகம்.*

*மனிதர்களாகிய நாம் பயன்படுத்தும் துணி கிழிந்துவிட்டாலோ, அல்லது பழையதாகிவிட்டாலோ அதைத் தூக்கி எறிந்துவிட்டு பிறகு புதிய துணியை தேடுவது கிடையாது. புதிய துணியை வாங்கிய பிறகே பழையதை நீக்கிவிடுகிறோம். பாம்புகூட புதிய சட்டையைப் பண்ணிக்கொண்டபிறகுதான் பழைய சட்டையை களைகிறது. அதேபோல் ஆத்மாவும் ஒரு சரீரத்தை விடுவதற்கு முன் தன் வினைக்கு ஏற்றார் போல்*

*சூக்ஷ்மமாக புதியது ஒன்றை பண்ணிக்கொள்கிறது. ஆதி சங்கரர் சொன்னதுபோல் கூட்டிலிருந்து கிளம்பிய பறவை கூட்டையே அடைவதுபோல் இந்த ஆத்மா புறப்பட்ட இடத்தை போய் சேரும்வரை சரீரம் மாறிக்கொண்டே இருக்கும்.*

*அடுத்த இரண்டு ஸ்லோகங்களும் ஆத்மாவைப் பற்றியவை.*

**நைநம் சி²ந்த³ந்தி ச ஸ்த்ராணி நைநம் த³ஹதி பாவக:** /

**ந சைனம் க்லேத³யந்த்யாபோ ந சோஷயதி மாருத:** // *(கீதை 2-23)*

**பொருள் :** *இந்த ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டுவதில்லை, தீ அதை எரிக்காது, நீர் நனைக்காது, காற்று அதை உலர்த்தாது.*

*பஞ்ச பூதங்களில் ஆகாசம் செயலற்றது. மற்ற நான்கு பூதங்களும், அதாவது நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கும் ஆத்மாவை பாதிக்காது என்கிறார் பகவான் ('ஆயுதங்கள் வெட்டாது' என்றால் ஆயுதங்கள் நிலத்திலிருந்து தான் வருகின்றன)*

*இன்றைய "ஆட்டம் பாம்" கூட நம்முடைய மனதை நாசப்படுத்தாது. கம்போடியாவில் ஆயிரக்கணக்கானவர்கள் யுத்தத்தினால் அங்கங்களை இழந்து இன்றும் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் கூட கோயில்களின் வாசல்களில் எத்தனையோ பிச்சைக்காரர்கள் கை கால்கள் இல்லாமல் யாசிப்பதைப் பார்க்கிறோம். ஆனால் அவர்கள் மனதில் எந்தவித பாதிப்பும் இல்லை. நம் வீடுகளில் பெண்கள் தினமும் காய் நறுக்கும்போது தெரியாமல் விரல்களை வெட்டிக்கொள்கிறார்கள். அடுப்பில் பாத்திரங்களை கையாளும் போது அவர்களுக்கு அக்கினியால் சூடு ஏற்படுகிறது. ஆனாலும் அவர்கள் மனதை இவை பாதிப்பதில்லை. நம்முடைய மனது சூக்ஷ்மமானது சரீரம் ஸ்தூலமானது. சூக்ஷ்மமானதை ஸ்தூலமானதால் தகர்க்க முடியாது. ஸ்ரீராமகிருஷ்ணர் தம்முடைய உபதேசத்தில் "புகையானது சுவரைக் கரியாக்குமே தவிர அதனால் சூழப்பட்டிருக்கும் வெளியிடத்தைக் கரியாக்காது." என்கிறார்.*

**அச்சே²த்³யோயமதாஹ்யோயம் அக்லோத்³யோஸோஷ்ய ஏவ ச** /

**நித்ய ஸர்வக³த: ஸ்தா²ணுர் அசலோயம் ஸநாதந:** // *(கீதை 2-24)*

**பொருள் :** *ஆத்மா வெட்டுப்பட முடியாதவன், எரிக்கப்பட முடியாதவன், நனைக்க முடியாதவன், மேலும் சந்தேகமின்றி உலர்த்தப்பட முடியாதவன், மற்றும் இந்த ஆத்மா நித்தியமானவன், எங்கும் நிறைந்தவன், இயக்கமற்றவன், ஸ்திரமாக இருப்பவன், சாசுவதமானவன்.*

*23ஆவது லோகத்தில் சொன்னதை பகவான் மாற்றிச் சொல்கிறார்.*

தொடரும்..

# நாலடியார்
## 4. அதிகாரம் – 7 “சினம் இன்மை”

*“சினம் இன்மை” என்றால் மற்றவர்கள் அறிந்தோ, அறியாமலோ நம்மீது கோபப்படும்போது நமக்கு கோபம் வந்தாலும் அந்த கோபத்தை நம்முள்ளே அடக்கி அவர்கள் மீது இரக்கம் கொள்ள வேண்டும் நாலடியாரில்* **“சினம் இன்மை”** *என்னும் அதிகாரத்தில் பத்து பாடல்கள் உள்ளன. அவற்றிலிருந்து இரண்டு பாடல்கள்*

**உபகாரம் செய்ததனை ஓராதே தங்கண்**
**அபகாரம் ஆற்றச் செயினும் – உபகாரம்**
**தாம்செய்வ தல்லால் தவத்தினால் தீங்கூக்கல்**
**வான்தோய் குடிப்பிறந்தார்க் கில். (69)**

**விளக்கம் :** *தாம் செய்த உதவியை சிறிதும் எண்ணிப் பாராமல் தமக்கு மிகுதியான தீமைகளை செய்தாலும் தாம் அவருக்கு திரும்பவும் உதவி செய்வார்களேயன்றி தவறியும் தீமை செய்யமாட்டார்கள். யார் அவர்கள்? வானளாவிய புகழ் கொண்ட குடியிலே பிறந்தவர்கள்.*

*நாம் யாருக்காவது நல்ல உதவி செய்திருந்தால் அதைப்பற்றி நினைக்காமல் நமக்கே தீமை செய்யவேண்டும் அவர்கள் நினைத்தால் நாம் அவர்களுக்கு தீமை செய்யாமல் நல்லதையே செய்யவேண்டும்.*

*இதைத்தான் வள்ளுவரும் 314 குறளில்*

**இன்னாசெய் தாரை ஒருத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்.**

*என்று கூறுகிறார்*

**கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயாற்**
**பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்**
**கீழ்மக்கள் கீழாய சொல்லியற்காற் சொல்பவோ**
**மேன்மக்கள் தம்வாயால் மீட்டு. (70)**

*சினம் கொண்டு நாய் தமது உடம்பைக் கடிப்பதைப் பார்த்தும், அதற்குப் பதிலாகத் தம் வாயினால் நாயைக் கடித்தவர்கள் இவ்வுலகில் இல்லை, அதுபோல, தகுதியின்றி, கீழ் மக்கள் கீழ்த்தரமான சொற்களைச் சொல்லும்போது மேன் மக்கள், அவர்களுக்கு எதிராக அச்சொற்களைத் திருப்பிச் சொல்வார்களோ? சொல்லமாட்டார்கள்.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி

பகுதி - 7



சுக பிரம்ம ரிஷி

முற்காலத்தில் கஷ்டங்களையும், துன்பங்களையும், வேதனைகளையும் அடைந்த மனிதர்கள் தங்கள் மனதை எப்படி மாற்றிக்கொண்டார்கள் என்பதை கதையாக நமக்கு கூறி அதில் அவர்கள் தெரிந்துக்கொண்ட தத்துவங்களை நமக்கு கூறி நாமும் அதேபோல் நம் வாழ்வில் உயர்வதற்கான வழிகளைக் காட்டுவதுதான் **ஸ்ரீமத் பாகவதம்**. அப்படிப்பட்ட ஒருவரின் கதைதான் வாசகர்கள் கடந்த இரண்டு மாதங்களாக படித்த **"கோகர்ணனின்"** கதை.

இந்த மாதம் **"பரீக்ஷித்"** என்ற அரசனுக்கு **"தக்ஷகன்"** என்ற பாம்பால் ஏற்பட இருந்த மரணத்தை எதிர்கொள்ள ஸ்ரீமத் பாகவதம் எப்படி உதவியது என்பதை பார்ப்போம்.

பாரதப்போரில் அர்ஜுனனின் மகன் அபிமன்யு கொடூரமான கொலையுண்டான். அப்போது அவனுயை மனைவி **"உத்திரை"** கர்ப்பமாக இருந்தார். பாண்டவ வம்சத்தையே அழிப்பேன்" என்று சபதம் எடுத்த **"அஸ்வத்தாமன்"** உத்திரையின் வயிற்றில் இருந்த கருவை அழிக்க எண்ணி, பிரம்மாஸ்திரத்தை ஏவினான். இதை அறிந்த உத்தரை ஸ்ரீகிருஷ்ணனை சரணடைந்தாள். பாண்டவ குலத்தையே அடியோடு அழிப்பதற்காக அஸ்வத்தாமன் **"அபாண்டவீயம்"** என்னும் அஸ்திரத்தை ஏவியிருக்கிறான் என்பதை புரிந்துக்கொண்ட ஸ்ரீகிருஷ்ணன் தானே ஜோதி ரூபம் எடுத்து உத்திரையின் கர்ப்பத்தினுள் புகுந்து தன்னுடைய சுதர்சன சக்கரத்தால் அந்த **"அபாண்டவீயம்"** அஸ்திரத்தை அழித்து கர்ப்பத்தைக் காப்பாற்றினார்.

உத்திரைக்கு குழந்தை பிறந்ததும், அது கர்ப்பத்தில் இருக்கும்போது பகவான் ஸ்ரீவிஷ்ணுவால்

காப்பாற்றப்பட்டதால் குழந்தைக்கு **"விஷ்ணுராதன்"** என்று பெயர் சூட்டினார்கள். **"விஷ்ணுராதன்"** நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வரலானான். அவனைப் பார்ப்பதற்கு ஏராளமானவர்கள் அரண்மனைக்கு வந்தார்கள். தன்னைப் பார்க்க வந்தவர்களை எல்லாம் பார்க்கும்போது தான் கர்ப்பத்தில் இருக்கும்போது அங்கே தன்னைக் காக்கவந்தது இவர்தானா என்று ஒவ்வொருவரையும் பரீக்ஷித்துப் பார்த்ததால் குழந்தைக்கு **"பரீக்ஷித்"** என்றும் பெயரிடப்பட்டு அப்பெயரே அவனுக்கு நிலைத்துப் போனது. நாட்கள் நகர்ந்தன.

அதர்மத்தை ரூபமாகக் கொண்ட **"கலியுகம்"** பிறந்தது. தருமபுத்திரர், தன் பேரனான பரீக்ஷித்துக்கு பட்டாபிஷேகம் செய்து அஸ்தினாபுரத்திற்கு மன்னனாக்கினார். பரிக்ஷித் மிக திறமையானவர். நற்குணங்கள் கொண்டவன். பாண்டவர்களைப்போல் நல்லாட்சி நடத்தினான். விராட மன்னனின் மகளாகிய **"இராவதி"** யை மணந்துக்கொண்டான். அவர்களுக்கு **"ஜனமேஜயன்"** முதலான நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். பரீக்ஷித்தின் நீதி தவறாத நல்லாட்சி தொடர்ந்து நடந்தது. ஆனால் எத்தனை நல்லவர்களையும் விதி விட்டு வைப்பதில்லை. பரீக்ஷித்தின் வாழ்க்கையிலும் அது விளையாடத்தான் செய்தது.

ஒரு சமயம் பரீக்ஷித் ராஜன் தன்னுடைய நாட்டு குடி மக்களுக்கு துன்பத்தை விளைவிக்கும் துஷ்ட மிருகங்களை அழித்து அமைதியை நிலைநாட்ட காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். காட்டில் விலங்குகளைத் துரத்தி வேட்டையாடிக் கொண்டே வந்த மும்முரத்தில் அவன் தனது படைகளைப் பிரிந்து வெகுதூரம் வந்துவிட்டான். உச்சிப் பொழுதாகி சூரியன் தகித்துக் கொண்டிருந்தது. பசியும், தாகமும் அவனை வாட்டியது. தாகத்தைத் தணித்துக்கொள்ள குளம் குட்டை ஏதாவது கண்ணில் படுகிறதா என்று தேடினான். அப்போது சற்று தூரத்தில் ஒரு ஆஸ்ரமம் இருப்பதைக் கண்டான். இங்கு தன்னுடைய பசியும் தாகமும் தீர வழி கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் ஆஸ்ரமம் உள்ளே நுழைந்தான். உள்ளே ஒரு முனிவர் தவம் செய்துக்கொண்டிருந்ததைக் கண்டான். (அந்த முனிவரின் பெயர் "சமீகர்) அவரை நெருங்கிய அரசன் முனிவரை வணங்கி "முனி சிரேஷ்டரே நான் பரீக்ஷித் ராஜன்

வந்திருக்கிறேன், பசியாலும் தாகத்தாலும் மிகவும் களைப்படைந்துள்ளேன், தயவு செய்து அருந்த நீர் தாரும்" என்று கேட்டான். முனிவரிடமிருந்து எந்தச் சலனமுமில்லை. தொடர்ந்து பலமுறை அழைத்தும் முனிவரிடமிருந்து என்ற பதிலும் இல்லை. பரீக்ஷித்திற்கு பசியும் தாகமும் அதிகமானது. முனிவரிடமிருந்து ஏமாற்றமே கிடைத்தது. அவனது ஏமாற்றமே எரிச்சலாக, எரிச்சல் கோபமாக உருவெடுத்தது.

**"பசி வந்திட பத்தும் பறந்துபோம்"**

**"ஔவையார்"** பாடிய **"நல்வழி"** பாடல்களின் ஒரு அருமையான வெண்பா.

**மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – தேனின்**
**கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந்திடப் பறந்து போம்** (வெண்பா– 26)

**விளக்கம் :** ஒருவனுக்கு பசி தோன்றினால் அவனிடத்தில் உள்ள பத்து சிறந்த குணங்கள் போய்விடும். அதாவது மானம், குலப்பெருமை, கல்வி, வலிமை, அறிவு, பிறருக்கு கொடுக்கும் குணம், தவம், பெருந்தன்மை, தளராத முயற்சி, தேன்போல் பேசும் மங்கையர் மேல் உள்ள ஆசை ஆகியவை. இதைத்தான் **"பசி வந்தால் பத்தும் பறக்கும்"** என்பார்கள்.


பரீக்ஷித் ராஜனுக்கு பசியும், தாகமும் வந்தபோது அந்த முனிவரிடம் தண்ணீர் கேட்டான். அவர் தியானத்தில் இருந்ததால் எதுவும் பேசவில்லை. அப்போது பரீக்ஷித் ராஜன் என்ன செய்தான்?

தொடரும்...

99940 89133 99940 89140



**SRI SASTHA CATERING**




*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## விவாஹத்தின் உத்தேசங்கள்



இத்தனை உத்தமமான விவாஹ ஸம்ஸ்காரத்தின் முக்யமான மூன்று உத்தேசங்கள் : ஒன்று, வேதத்தைப் படித்து முடித்து வந்த ஒருத்தனின் குடும்பம் நடக்க வழி செய்து கொடுத்து, அவன் வேத தர்மங்களை அநுஷ்டிப்பதற்குத் துணை சேர்த்துக் கொடுப்பது. இரண்டு.

ஸம்ஸ்காரமுடையவர்களுக்கே உத்தம தம்பதிகளாக இருந்து, உன்னதமாக வேத தர்மத்துக்கு எதிர்கால வாரிசுகளை உற்பத்தி செய்து தருமாறு பண்ணுவது; அதாவது வரப்போகிற காலத்தில் லோகத்தில் உயர்ந்த மனோபாவமுள்ள ஜனங்கள் இருக்கும்படியாக ஏற்பாடு செய்வது. மூன்றாவது ஸ்திரீகள் கடைத்தேறப் பெரிய பிடிப்பாக ஒன்றை உண்டாக்கிக் கொடுப்பது. பரிபக்குவமடையாத நிலையில்தான் புருஷன் யக்ஞாதி அநுஷ்டானங்களைப் பண்ணுவது. அவன் அப்படிச் செய்வதற்குத் துணையாக வருகிற பத்தினியோ தன்னுடைய பதிவிரத்யத்தாலேயே அவனையும் விடப் பரிபக்குவம் அடைந்து விடும்படி நம்முடைய வைதிக தர்மம் பண்ணிவிடுகிறது! இந்த மூன்றோடு, அல்லது மூன்றுக்குப் பிறகு நாலாவதாக வருவதுதான் தம்பதியின் இந்திரிய ஸௌக்கியம் என்பது. முக்கிமான மூன்றும் எடுபட்டுப் போய் நாலாவது மட்டுமே முழுக்கப் பிரதானமாகிவிட்ட இன்றைய கால ஸ்ததியிலிருப்பவர்கள் நான் சொன்ன சாஸ்திரோக்தமான அந்த உத்தேசங்களைப் புரிந்து கொண்டால் நாம் நல்லதற்கு மாறுவதற்கு வழி பிறக்கும் அப்படிப் புரிந்து கொள்வதற்கு சந்திரமௌலிச்வரர் அநுக்ரஹம் செய்ய வேண்டும். பாணிக்ரஹணம், மாங்கல்ய தாரணம், ஸப்த பதீ என்று புது தம்பதி ஏழடி எடுத்துவைப்பது இவை விவாஹத்தில் பிராதானமான அம்சங்கள். மாங்கல்ய தாரணம் வேதத்திலேயே உண்டா, இல்லையா என்று பெரிய சர்ச்சைகள் செய்வதுண்டு. இது அவசியமில்லாத சர்ச்சை. எத்தனையோ ஆயிரம் காலமாக இருந்து வந்திருக்கிற மாங்கல்ய தாரணம் அவசியம் செய்ய வேண்டியதே!

# கல்லிலே கலைவண்ணம் கண்டான்

''டங், டங்கென'' உளியின் ஒலி, சுற்றிலும் வெட்டப்பட்ட பாறைகள், கை கூப்பி நிற்கும் ஆஞ்சனேயரின் சிலை ஒருபுறம், தன்னையே செதுக்கிக் கொண்டிருப்பதைப் போல காட்சியளிக்கும் ஒரு தாயின் சிலை மறுபுறம், ஆங்காங்கே கல்லின் முன்புறம் மட்டும் தோன்றும் அய்யனாரும், நவகன்னியரும், திருமுருகன் பூண்டியின் சாலையோரம் அமைந்திருக்கும் "கலைமகள் சிற்பக்கூடம்" என்கிற பெயர் பொறித்த பலகையை இரண்டு கல் யானைகள் தாங்கி நிற்கிறது. கூடத்தின் ஓரத்தில் ஸ்வீடன் நாட்டிலிருந்து சிலைகளைப் பற்றி ஆராய்ச்சி புரியும் ஒரு நபருக்கு, கலை நுட்பங்களை விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறார் மேகநாதன் அய்யா. பரம்பரை பரம்பரையாக சிற்ப வேலை செய்யும் அய்யாவின் குடும்பம், அவரின் கனவாலும், விடா முயற்சியாலும் உலகப் புகழ் பெற்றது. தமிழக அரசாங்கம் அய்யாவிற்கு கலைமாமணி பட்டத்தையும் வழங்கியிருந்தது. கலைமகள் கலைக்கூடத்தில் சிற்பம் பயிலும் மாணவர்களும் இருந்தனர். உலகத்தின் மூலை முடுக்கிற்கும் திருமுருகன்பூண்டியிலிருந்து சிற்பங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட வண்ணம் இருந்தது.

அய்யாவின் மாணவர்களில் அடுத்த தலைமுறையில் மாபெரும் புகழைப் பெற்றவன் அகிலன். அகிலனின் கைவண்ணத்தில் உயிர் பெறும் சிற்பங்கள் கண்முன்னே பேசுவதைப் போலத் தோன்றும், கடவுள் உருவங்கள் மட்டுமல்லாது ஹரப்பா, மொஹெஞ்சதாரோ சிற்பங்களைப் போல தற்காலத்து கலாச்சாரத்தைக் குறிக்கும் சிற்பங்களை செய்வதிலும் கைதேர்ந்தவன். அகிலனும் சிற்பக்கலைப் பரம்பரையைச் சேர்ந்தவன், மேகநாதன் அய்யாவின் ஆஸ்தான சீடன்.

அதே கலைக்கூடத்தில் நான்கு வருடங்களாக சிற்பம் பயில்கிறான், ராஜு, சிறு வயதிலிருந்தே தான் ரசித்த கோயில் சிற்பங்களால் கவரப்பட்டு, பல மைல்கள் தாண்டி அய்யாவை நாடி வந்தவன். அவனின் பலமே பொறுமையும், அவன் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டு நுண்ணிய வேலைப்பாடுகளுடன் வடிக்கும் சிற்பங்களும்.

இந்த இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் குருகுலம் போல சிற்பம் பயிலும் மாணவர்கள் இவர்கள். சோதனை முயற்சியாக, மேகநாதன் அய்யாவிடம் பயில்கிற அனைத்து மாணவர்களுக்கும் விதவிதமாய் சிற்பங்கள் செய்வதற்கான குறிப்புகளும், அதற்கான அவகாசத்தையும் கொடுத்திருந்தார். இரண்டு அடி சிற்பம் செய்ய

ஏறக்குறைய ஒரு மாதம் எடுக்கும். ஐந்து மாதங்கள் கழித்து சோதனையின் முடிவில், எப்பொழுதும் போல அகிலனின் சிற்பங்கள் கலையம்சத்துடன் ஜொலித்து, புது விதமான பல முயற்சிகளைச் செய்து அசத்தியிருந்தான்.

ராஜுவின் அறையிலிருந்து உளியின் ஓசை வந்த வண்ணம் இருக்கிறது. ஆனால் ஐந்து மாதங்களாக ஐயாவின் பார்வைக்கு அவனுடைய எந்த சிலையும் வரவில்லை. மிகவும் யோசித்துவிட்டு அய்யா, ராஜுவின் அறைக்குள் நுழைந்தார். ஆங்காங்கே பாதி முடிக்கப்பட்ட சிற்பங்கள்.

அய்யா ராஜுவைப் பார்த்து "பேசலாமா?" என்றார்.

சற்று தயக்கத்துடன் "சரி அய்யா" என்றான் ராஜு.

"எது உன்னைத் தடுக்கிறது, ஏன் உன்னுடைய சிற்பங்கள் அழகிய பிழைகளாக உள்ளன?"

"அது வந்து..."

மனம் விட்டு பேசப்பா, ராஜு வேறு யாரும் இங்க இல்ல.

"அது வந்து அய்யா, நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் அகிலனின் சிற்பம் போல என்னுடைய வேலை இல்லை. பாதி முடிக்கும் முன்னரே எனக்கு அதற்கான முடிவு என் கண் முன்னே தெரிகிறது. மிகச் சிறப்பாக அமையப்போவதில்லை என தெரிந்த பின்னர் நான் ஏன் அதைத் தொடர வேண்டும்"?

"ம்.. நல்ல கேள்வி ராஜு, எந்த ஒரு கலைஞனுக்கும் அடிக்கடி வந்து போகும் எண்ணம் தான் இது, நம்ம நூலகத்துக்கு போலாமா"

தலையைக் குனிந்தபடியே "சரி" என்றான்.

நூலகத்தில் தான் என்றோ வாசித்த புத்தகத்தில் உள்ள ஒரு பக்கத்தைத் தேடி எடுத்தார் ஐயா.

"சிறு வயதில் நான் வாசித்த இந்த மஹாபாரத உட்கதை எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கு. உனக்கு இன்னைக்கு சொல்லனும்னு தோனுது.

"மஹாபாரத உட்கதையின் ஒன்றில் பராசுர முனிவர் என்பவர் ஒருவரின் கதையுண்டு. அவர் என்ன செய்தார் தெரியுமா, பத்து வருடங்களாக விடாமுயற்சி செய்து தான் திரட்டிய அனைத்து வேதக் குறிப்புகளையும் ஒரு நூலாகக் கொண்டு வந்தார். நூலின் வேலைகள் முடிந்த அன்று காட்டினுள்ளே சற்று சுற்றித் திரிந்துவிட்டு இளைப்பாறலாம் என்று நினைத்தவரின் காதுகளில் அமுதகானம் போல எங்கிருந்தோ ஒலித்தது. ஒலியை தொடர்ந்து போனால், ஒரு இடைச் சிறுவன் தன்னிலை மறந்து புல்லாங்குழல் வாசித்துக்

கொண்டிருந்தான். அவன் இசையில் மயங்கிய முனிவர் சற்று நேரம் கழித்து கண் திறந்து பார்த்தால் மரங்களும், செடிகளும், வனமிருகங்களும் சிறுவனின் இசையில் மதிமயங்கி கிறங்கிப் போயிருக்கிறது.

சுதாரித்துக் கொண்ட முனிவர், விடு விடுவென தன் குடிசைக்குள் சென்று அவரின் வேத சாராம்ஸ நூலை தீயில் கொளுத்த முற்படுகிறார். அக்கணம் அவர் கண்முன்னே நாரதர் தோன்றி 'என்ன ஆயிற்று பராசுரா'' என்றார்.

என்னுடைய படைப்பெல்லாம் ஒரு படைப்பா, ஏதுமறியா சிறுவன் ஒருவன், அவன் இசையால் அஃறிணைகளைக் கூட மயக்க வைக்கிறான். அவனின் கலை முன்னே என்னுடையது துச்சமாகத் தோன்றுகிறது என்றார்.

அதற்கு நாரதர் 'சற்று பொறு, இந்தக் காட்டில் யானையின் கால்தடம் கண்டிருக்கிறாயா?'' என்றார். 'ஆம்' எனக் கூறிய முனிவரின் பதிலைத் தொடர்ந்து நாரதர் "ஒரு சில கால்தடங்களால் நூறு, இரு நூறு வரும் முன்னர் பதிந்தது தெரியுமா, யானை விட்டுச் செல்லும் அத்தாட்சி எத்தனை வருடம் இருக்கிறது, தெரிகிறதா! ஆனால் இதே காட்டில் தான் தேன்சிட்டும் இருக்கிறது, பல ஆயிரம் வருடங்களாக இருக்கிறது. தேன்சிட்டின் தடம் உனக்குத் தெரியுமா? எங்குமே இதற்கான சாட்சிகள் இருக்காது. ஆனால் தேன் சிட்டு மட்டும் இல்லாவிட்டால் இப்பேற்பட்ட பூக்களும், கனிகளும், காய்களும் அமைந்த காடு உருவாகி இருக்குமா? சற்று யோசித்துப் பார்.

செய்யும் வேலை பெரியதோ, சிறியதோ நீ உன் மனதின் முழு கவனத்துடன் செய்த எந்த வேலையின் முடிவையும் யாரோடும், எவரோடும் ஒப்பிட்டு பார்க்கவே கூடாது, ஒருவரின் பணி நூறு பேர்களைச் சென்று அடையலாம், மற்றொருவரின் முயற்சியோ ஆயிரம் பேர்களைச் சென்று அடையலாம், சில நேரம் தன் வாழ்நாளில் அதற்கான பலனை பார்க்காமல் கூட சில நபர்கள் மடிந்து போவார்கள், ஆனால் அதைப் பற்றி யோசிக்காமல் நல்ல படைப்புகளையும், தர்மங்களையும் செய்து கொண்டே தான் இருக்க வேண்டும்'' என முடித்தார் நாரதர்.

இவ்வுலகத்திற்கும் பராசுரமுனிவரின் மாபெரும் படைப்பு அரும்பெரும் வரமாகக் கிடைத்தது.

கதையை கூறி முடித்தவுடன் வேறு எதுவும் கூறாமல் புன்னகை புரிந்துவிட்டு நகர்ந்தார் அய்யா. பல மாதங்களாக குழம்பிக் கொண்டிருந்த ராஜுவின் மனம் தெளிந்த நீரோடை போல ஆனது.

**- வெ. சிவசங்கரி**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
www.wopper.in




# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "**இலவச காப்பகம்**"

இந்நூற்றாண்டின் மாபெரும் துயரமான கொரோனா எளிய மக்களை பெரிதும் பாதித்து வருகிறது. இத்துயரிலிருந்து மீள்வதற்கும் - வாழ்வதற்கும் வழி தெரியாமல் தவிக்கும் எளிய மக்களின் பசி தீர்க்கும் பணியை கொரோனா தொடங்கிய காலம் முதல் இன்றுவரை தொடர்ந்து செய்து வரும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ண மூர்த்தி அவர்கள், சமுதாயத்தின் பல தளங்களில் இருக்கும் ஏழை, எளிய மக்களுக்கு தரமான (5 கிலோ) அரிசி, Sunflower Oil, மளிகைப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கி வருகிறார். **அவ்வகையில் 5.6.2021 அன்று கிழக்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அலுவலகத்தில் எளிய மக்களுக்கு "அரிசி மற்றும் முதல் தர துவரம் பருப்பு" வழங்கப்பட்டது.** **கொரோனா பேரிடர் நம்மை விட்டு நீங்கும் வரை ஸ்ரீ மாதா டிரஸ்டின் பசி தீர்க்கும் பயணம் தொய்வின்றி தொடரும்.**










இதுவரை சமார் **24,600 தரமான ஈரடுக்கு பருத்தி துணி முகக்கவசங்கள்; 74,500 கிலோ தரமான அரிசி; 2800 கிலோ முதல் தர துவரம் பருப்பு; 900 லிட்டர் "Gold Winner" Sun Flower Oil** ஆகியன ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மாபெரும் மக்கள் சேவையில் ஸ்ரீ மாதா டிரஸ்டுடன் இணைந்து பயணிக்க விரும்பும் நல்லவர்களின் நன்கொடைகளையும், நல்லாசிகளையும் என்றென்றும் மனதார வேண்டுகிறோம். கொரோனாவை முறியடிக்க எதிர்கொள்ளும் போரில் சிக்கித் தவிக்கும் எளிய மக்களை தங்களின் உறவுகளாக எண்ணி உதவி செய்யுங்கள். உங்கள் நன்கொடையில் ஒரு ரூபாய் கூட வீணாகாமல் அது எளிய மக்களைச் சென்றடையும் என உறுதியளிக்கிறோம். இதன் மூலம் காலத்தால் அழியாத செல்வமான பெரும் புண்ணியம் உங்களையும், உங்கள் சந்ததியினரையும் வந்து சேரும் என்பது எங்களது உறுதியான நம்பிக்கை. **சிந்தியுங்கள் !**

**செயல்படுங்கள் !! உண்மையான இன்பம் இதுவே என்று உணருங்கள் !!!**



மக்கள் பணியில்
ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி
திரு அமெரிக்கன் அவர்கள்





நமது ஆடிட்டர் **திரு சுந்தரராஜன்** மற்றும் சக நண்பர்கள் இணைந்து கொரோனா கால நிதியுதவியாக சுமார் 800 கிலோ அரிசி வாங்குவதற்கான நன்கொடை வழங்கினர். திரு சுந்தரராஜன் அவர்கள் தனது கரங்களினால் எளியோருக்கு "அரிசி - துவரம்" பருப்பு வழங்கி மகிழ்ந்தார்.



கிழக்கு தாம்பரத்தைச் சேர்ந்த மனித நேய பண்பாளரான திரு **வி.சேகர்** அவர்கள் **M/s.Analogic Controls India Ltd., Hyderabad** நிறுவனத்திடமிருந்து அனுப்பப்பட்ட மிகவும் தரமான 2000 என்-95 முகக்கவசங்களை எளிய மக்களுக்கு இலவசமாக வழங்கிட ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் வழங்கி மகிழ்ந்தார்.



மேலும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் செய்து வரும் பல்வேறு நலத்திட்டங்களுக்கு, தனது நன்கொடையாக ரூ.10,000/- வழங்கி மகிழ்ந்தார்.

**இந்த இரு நல்ல உள்ளங்களுக்கும் சங்கமிக்க இணைப்பு பாலமாக திகழ்ந்த திரு ராம்குமார் அவர்கள்**



பேரிடர் மற்றும் பெருந்தொற்று காலங்களில் மழை – வெயில் பாராமல் முன்னின்று களப்பணியாற்றும் காவல்துறை நண்பர்கள், ஸ்ரீ மாதா டிரஸ்ட் சார்பாக என்-95 முகக்கவசங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.

**Account Name : SRI MATHA TRUST**

Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20

Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, (next to Harini Skin & Laser Clinic) Chennai - 600 020. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Matha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**

**vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org**

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்

*சென்றமாத தொடர்ச்சி....*

*அந்தக் காரணத்திற்காக என்னுடைய மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரியவர்கள். ஆனால், காலத்தின் கோலத்தால், சூழ்ச்சிமிக்க கோட்பாடுகளுக்கு அவர்கள் இரையாகியிருக்கிறார்கள். வேதங்கள் மனிதர்களால் இயற்றப்பட்டனவாக இருக்கவே முடியாது என்பதைத் தர்க்க ரீதியாக, இந்த அத்தியாயத்தில் நிலைநாட்ட, அச்சான்றோர்களின் அனுமதியையும் ஆசிகளையும் நான் வேண்டுகிறேன். என்னுடைய இந்தச் செயல் என் அகந்தையாகவோ அம்மகான்களை நான் அவமரியாதை செய்வதாகவோ கருதப்படக்கூடாது. மாறாக, என்னுடைய செயல், மறைந்த அம்மேதைகளின் ஆன்மாக்களைச் சாந்திபெறச் செய்யும் என்றும் அவர்களின் ஆசிகளைப் பெறுவேன் என்றும் உண்மையாக நம்புகிறேன்.*

*3.2 மொழியின் தோற்றம் :*


*இந்த விவாதத்தை சாஸ்திரங்களில் விவாதித்துள்ளது போல் தொடங்குவது நன்றாயிருக்கும். மேல்நாட்டுப் பண்டிதர்களின் முக்கியமான வாதம் என்னவென்றால், மனித நாகரிகம் பரிணாம வளர்ச்சியுற்றது அண்மையில்தான், அதனால் மொழிகளும் கூட சமீபத்தில்தான் உருவாயிருக்க வேண்டும், என்பதேயாகும். இந்த அனுமானத்தின் காரணமாக எந்தச் சாதாரண மனிதனுக்கும் கீழ்க்கண்ட ஐயம் எழுவது இயல்பு:*

*பலவிதமான எழுத்துக்களைக் கொண்ட சொற்களால், வேதங்கள் இயற்றப்பட்டுள்ளன. எனவே, அவை மனிதர்களால்தான் சொல்லப் பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு. எடுத்துக்காட்டாக, உதடுகள் இல்லாதவனால், ப, ப்ப, ப, ப்ப, ம போன்ற எழுத்தொலிகளை எழுப்ப முடியாது. இடி, மின்னல், நதிகள், கடலின் கர்ஜனை போன்ற ஒலிகள் உள்ளன. பறவைகளும் விலங்குகளும் கூடப் பலதரப்பட்ட ஒலிகளை எழுப்புகின்றன.*

*தொடரும்...*

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## ஆனந்தத்தின் மூலகாரணம்



சென்றமாத தொடர்ச்சி...

சுகத்தில் விருப்பும், துக்கத்தில் வெறுப்பும் இருப்பது ஒருவனுடைய அடிப்படை ஆசையாகும். நிச்சயமாக, நோயானது ஒருவனுடைய இந்த அடிப்படை ஆசையை பலவீனப்படுத்துவதில்லை. உண்மையில், சிறிது ஆராய்ந்து பார்த்தாலே, சுகம் கொடுப்பதாக நாம் நினைக்கும் எந்த ஒரு பொருளுக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய தன்மை அதனிடத்தில் இயற்கையாக இல்லை என்பதை மிக சுலபமாக புரிந்து கொண்டு விடலாம். இப்படி பகுத்து ஆராய்வதால் வைராக்கியம் ஏற்படும்.

ஒரு தந்தை தன் குழந்தையைக் கொஞ்சினார். அவர் அதற்கு முத்தமிடும் போது, சொறசொறப்பான அவருடைய மீசையும் தாடியும் குழந்தையின் மிருதுவான முகத்தை முட்கள் போல் குத்தின. வலியால் குழந்தை அழத் தொடங்கியது. அதைச் சமாதானப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு அவர் மீண்டும் அதற்கு அடிக்கடி முத்தமிட்டுக் கொண்டே இருந்தார். இதன் விளைவாக அக்குழந்தை மேலும் அதிகமாகக் கத்த ஆரம்பித்தது.

'ஆத்மாவின் பொருட்டே, எல்லாப் பொருட்களும் ஒருவனுக்குப் பிரியமானவையாக இருக்கின்றன.' என்று பிருஹதாரண்யக உபநிஷத்து நமக்குச் சொல்லிக் கொடுக்கிறது. ஒருவன் தன் மனைவியை நேசிக்கிறான் என்றால், அது அவளுடைய சுகத்திற்காக மட்டுமல்ல அவளைத் தன்னுடைய மனைவி என்று நினைக்கின்ற காரணத்தாலும் மற்றும் தனது சந்தோஷத்தை அவளுடைய சந்தோஷத்தோடு சம்பந்தப்படுத்திக் கொள்வதாலும் தான்.

தொடரும்....

# பெற்றோர்களே! கவனியுங்கள்!
## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 7

**"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்."** *(அதிகாரம் – 62 குறள் – 620)*

*'மனந்தளராது, இடைவிடாது முயற்சி செய்கிறவர்கள் வாழ்வினைகளையும் வென்றுவிட முடியும் என்று மிக எளிமையாக விடாமுயற்சியைப் பற்றி' கூறுகிறார் திருவள்ளுவர்.*

*எப்பொழுதும் இந்தியக் குழந்தைகள் அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டு குழந்தைகள் ஒரு குறிக்கோளுடன் வாழ்க்கை, கல்வி, பண்பு, மதம், கலாச்சாரம் ஆகியவற்றை அணுகும் முறையை தான் பின்பற்றுகிறார்கள். அதற்கு பெற்றோர்கள் பெரும் முயற்சி எடுக்கின்றார்கள்.*

*இன்று 'கொரோனா' காலகட்டத்தில் மாணவ-மாணவியருக்கு குறிக்கோள் என்பதே 'வேஸ்ட்' என்கிற எண்ணம் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. மாணவ மணிகள் உயிர் தான் முக்கியம் என்று நம் மத்திய அரசும், பல மாநிலங்களும் 'ஆல்-பாஸ் என்பதை +2 விற்கு அறிவித்து விட்டார்கள்.*

*இதற்கு தானா இத்தனை கஷ்டப்பட்டோம், உழைத்தோம் எனும் வெறுப்பு பல மாணவ மணிகளிடம் தோன்றிவிட்டது. இதனால் டிப்ரஷன், கோபம், இயலாமை என்று கூடிக்கொண்டே போய், 'சைக்கியாட்ரிஸ்ட்' மற்றும் 'கௌன்சிலர்' களின் தேவை அதிகமாகியுள்ளது.*

*உங்கள் குழந்தைகளிடம் இத்தகைய மன நிலையிருந்தால் (கவனியுங்கள்) நீங்கள் அதை கையாளும் விதம் வேறாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதம் என்பதால் தனித்தனியாகத்தான் 'கௌன்சிலிங்' செய்ய வேண்டும். மனதில் வெறுப்பு-கோபம் சூழ்ந்ததால் குழந்தைகள் இருவிதமாக வெளிப்படுத்துவார்கள். ஒன்று யாருடனும் பேசாமல், கேட்ட கேள்விக்கு பதில் கூறாமல், 'ஆன்ட்ராய்டு*

ஃபோனும்' கையுமாக வெறித்துக் கொண்டிருப்பார்கள்.

நினைத்ததை பேசும் தன்மையுடையவர்கள் தங்கள் கோபத்தை வார்த்தைகளாலும் செய்கைகளாலும் கொட்டித்தீர்த்து விடுவார்கள்.

இந்த இரண்டு வகையான நடத்தையை ஒரு வாரத்திற்கு மேல் அனுமதிக்கக் கூடாது. நீங்கள் (பெற்றோர்கள்) சுயமாக இதைத் தீர்த்துவைக்க முயற்சி செய்யுங்கள். உங்களால் முடியவில்லையெனில் 'தொழில் வல்லுநர்களிடம்' (Professionals) செல்லத் தயங்காதீர்கள். **'வேத பாரதி'யை அணுகுங்கள்.**

சென்றமாதம் தெரிவித்த 20-20-20 மற்றும் 'டி-டாக்ஸிங்' (Detoxing) பற்றி பேசுவோம்.

இந்த இதழ் உங்கள் கையில் தவழும் பொழுது கல்லூரிகளும், பள்ளிகளும் 'ஆன்லைனில்' திறந்துவிடக் கூடும். இந்த வருடத்தின் நிலைமையும் உயிர் காப்பதில் தான் சிக்கியுள்ளது என்று புரிகின்றது.

மொபைல், டேப்லெட், ஐ-பாட் அல்லது வேறு எதுவாக இருந்தாலும் அதன் முன் நீங்களும் உங்கள் குழந்தைகளும் உட்காரத்தான் வேண்டும்.

நேரடி வகுப்புகளில் ஒரு குழந்தையின் கவனம் 45 நிமிடங்கள் வரை இருக்கும். அதனால் தான் ஒரு ஆசிரியர் முதல் 5 நிமிடங்கள் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கவும், கடைசி 5 நிமிடங்கள் ஏதாவது 'ஜோக்' அடித்து கலகலப்பாக்கவும் பழக்கிக் கொள்கிறார்கள்.

இன்று 'ஆன்லைனில்' தொடர்ந்து 4 மணி நேரங்கள் பாடம் எடுத்து முடித்தாக வேண்டும் எனும் கட்டாயம். அதனால் முதல் 20 நிமிடங்கள் மொபைல் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தால், அடுத்த 20 நொடிகள் / 20 அடிகள் தள்ளி ஏதாவது (தோட்டம்-மரம்) என்று பார்க்க வேண்டும். அடுத்த ஓர் 5 நிமிடம் உடலை அசைப்பது என்று மருத்துவர்கள் 20-20-20யைப் பற்றி கூறுகிறார்கள்.

இது இன்றைய சூழலில் சாத்தியமற்றதாக உள்ளது. 20 நிமிடங்கள் மட்டுமே உங்களுக்கு ஒரு வகுப்பு என்றால் ஆசிரியர்களுக்கு 45 நிமிடத்திலிருந்து 20 நிமிடத்திற்கு குறைத்து நேரமளித்தால் கற்றுத்தருவது எப்படி எனும் கேள்வி எழுகிறது?

யோசியுங்கள்...

தொடரும்....

# ‘ஆடி’ மாதம்

நம்முடைய முன்னோர்கள் கடைபிடித்து வந்த சாஸ்திர சம்பிரதாயங்களை நாம் இன்றும் கடைபிடித்து வருகிறோம். அவற்றுக்கு நிச்சயமாக அறிவியல் முக்கியத்துவம் இருக்கும். அந்த வகையில் ஒவ்வொரு தமிழ் மாதம் பிறப்பிற்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. தமிழ் மாதம் சூரியனின் சஞ்சாரத்தை வைத்து கணக்கிடப்படுகிறது. அந்த வகையில் ஆடி மாதம் தமிழ் மாதங்களில் 4வது மாதமாகும். சூரியன் கர்க்கடக ராசியில் புகுந்து வெளியே வர 31 நாட்கள், 28 நாடி, 12 விநாடிகள் ஆகும், ஆகவே இந்த மாதம் 31 நாட்களைக் கொண்டதாக இருக்கும், ஆடி மாதத்திலிருந்துதான் பண்டிகைகள், கோயில் உற்சவங்கள், விரதங்கள் முதலியவை களைகட்ட ஆரம்பிக்கும். ஆகையால் பொதுவாக ’ஆடி’ மாதத்தை ’அம்பாள்’ மாதம் என்பார்கள். ஆடி பவுர்ணமி. ஆடிக் கிருத்திகை, ஆடித்தபசு, ஆடி வெள்ளி, ஆடிச் செவ்வாய், ஆடிப்பெருக்கு, ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, என்றும், கிராமங்களில் ’தீ மிதித்தல்’ ’கூழ் ஊற்றுதல்’ என்றும் இந்த மாதம் முழுவதும் இந்துக்கள் பக்தி மார்க்கத்தில் மூழ்கித் திளைப்பார்கள். ஆன்மீகத்திலும் இறைவழிபாட்டிலும் அதிகம் ஈடுபடவேண்டி உள்ளதால் அவற்றுக்கு இடையூறாக மற்ற சுபவிசேஷங்கள் இருக்கக்கூடாது என்பதற்காகவே நம்முடைய முன்னோர்கள் ஆடி மாதத்தில் சுப விசேஷங்களைத் தவிர்த்துள்ளார்கள். ஆடி மாதத்தைக் குறித்து ஏராளமான அர்த்தமுள்ள பழமொழிகள் உள்ளன.

றும், கிராமங்களில் ’தீ மிதித்தல்’ ’கூழ் ஊற்றுதல்’ என்றும் இந்த மாதம் முழுவதும் இந்துக்கள் பக்தி மார்க்கத்தில் மூழ்கித் திளைப்பார்கள். ஆன்மீகத்திலும் இறைவழிபாட்டிலும் அதிகம் ஈடுபடவேண்டி உள்ளதால் அவற்றுக்கு இடையூறாக மற்ற சுபவிசேஷங்கள் இருக்கக்கூடாது என்பதற்காகவே நம்முடைய முன்னோர்கள் ஆடி மாதத்தில் சுப விசேஷங்களைத் தவிர்த்துள்ளார்கள். ஆடி மாதத்தைக் குறித்து ஏராளமான அர்த்தமுள்ள பழமொழிகள் உள்ளன.

**ஆடிப்பட்டம் தேடி விதை**

**ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்.**

**ஆடிச் செவ்வாய் தேடிக் குளி அரைத்த மஞ்சள் பூசிக் குளி.**

**ஆடிக் கூழ் தேடி குடி**

**ஆடித் தேரை தேடி தரிசி**

**ஆடிப் பால் குடிக்காத மாப்பிளையைத் தேடி பிடி**

**ஆனி முற்சாரல் ஆடி அடைசாரல்**

*ஆடி மாதத்தில் வரும் கடவுள் வழிபாடுகள் ஆன்மீக விழாக்களில் கலந்துகொண்டால் நம்முடைய வாழ்வில் வசந்தம் வீசும் என்பது முது மொழியாகும்.*

**'ஆடி'** *என்ற பெயர் எப்படி வந்தது என்பதற்கு* **'மஹா பெரியவா'** *அழகாக விளக்கம் அளித்துள்ளார்கள்.*

*'ஆஷாடத்தில், பூர்வ ஆஷாடம், உத்தர ஆஷாடம் என்று இரண்டு உண்டு. பூர்வம் என்றால்* **'முன்'**, *உத்தரம் என்றால்* **'பின்'** *என்று பொருள். பூர்வாஷாடத்தில்* **'ர்வ'** *கூட்டெழுத்துச் சிதைந்தும்,* **'ஷா'** *உதிர்ந்தும் தமிழில்* **'பூராடம்'** *என்கிறோம். இப்படியே உத்தராஷாடத்தை 'உத்திரம்' என்கிறோம். இந்த ஆஷாடங்களில் ஒன்றில் பௌர்ணமி ஸம்பவிப்பதால்* **'ஆஷாட'** *என்பதுதான் நம்முடைய* **'ஆடி'** *மாஸம்' மொத்தத்தில் பல அற்புதங்கள் ஹநிறைந்த மாதம்* **'ஆடி'** *மாதம்.*

**டி. சூரியநாராயணன்**

I saw the anniversary function of our Vedhabharathi on last sunday. It was a well organized function. All the participants chanted vedas with perfection. It not only exhibited the talents of the vidyarthis but also stood as a testimony to the teaching skill of our Gurus. My pranams to them.Compering was fantastic. My fullest appreciation to Ramakrishnan Anna and Muralidharan Anna.It was all because of the blessings of Mahaperiyava. Thanks to Venkatraman Mama and other organizers, without them I would not have got an opportunity to learn slogas and vedas.I shared the youtube link to my friends and relatives and most of them also viewed the entire programme. They also wanted to convey their appreciations. Most of them wanted to join in the upcoming classes. Whenever new classes are there, please share the link so that I can pass it on to them for their joining. Thanks to one and all who contributed for the success of the programme.

Periyava Saranam Umapathi.

# "பாரத தேசப் புனித யாத்ரை"

திருச்சி **K.கணேசன்**

*'அத்யாயம் - 14'*



*இந்த தொடர் கட்டுரைக்கு "காசி யாத்ரை'' என்று தலைப்பு வைக்காமல் "பாரத தேசப் புனித யாத்ரை'' என்று வைத்ததற்குக் காரணம் இந்தப் புனித யாத்திரை பல நூற்றாண்டுகளாக இந்துக்கள் தம் வீட்டிலிருந்து இராமேஸ்வம் சென்று தொடங்கி, ப்ரயாகை திரிவேணி சங்கமத்தில் புனித நீராடிவிட்டு அங்கு தனுஷ்கோடியில் எடுத்த மணல் லிங்கத்தைக் கரைத்து, காசி சென்று அங்கிருந்து கயா சென்று பிறகு மீண்டும் காசி & மீண்டும் இராமேஸ்வரம் வந்து ஸ்ரீ ராமநாதருக்கு கங்கை ஜலத்தால் அபிஷேகம் செய்வது என்ற மரபினால் 3 அல்லது நான்கு மாநிலங்களில் பயணப்பட்டு, புண்ணிய நதிகளில் நீராடுவதால் பாரதத்தில் ஒரு சில மாநிலங்களில் உள்ள க்ஷேத்ரம், தீர்த்தம் மற்றும் ஆலயங்களை பத்தியுடன் தரிசிப்பதால் இது பாரத தேசப் புனித யாத்ரையாக அனைவராலும் போற்றப்படுகிறது என்றால் அது மிகையாகாது யாத்ரை கட்டுரையை முடிப்பதற்கு முன் யாத்ரீகர்கள் செய்ய வேண்டிய சில முக்கியமானவற்றை மீண்டும் ஒரு பட்டியல் இட்டால் வாசகர்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்.*

**ப்ரயாகையில் செய்ய வேண்டியவை :**

*1. மஹா சங்கல்பம்*

*2. பெண்கள் வேணி தானம் (ஆண்கள் தலையில் சிறிது குடுமி வைத்து மொட்டை போடணும்– முண்டனம்)*

*3. திருவேணி சங்கம ஸ்நானம்*

*4. தனுஷ்கோடி மணல் லிங்கம் கரைத்தல்*

*5. கங்கை நீர் எடுத்தல் (பின்னர் சொம்பில் அடைப்பதற்காக)*

*6. தீர்த்த ஸ்ராத்தம்*

*7. தம்பதி பூஜை, கங்கா பூஜை*

*8. அன்னதானம் (ஸராத்தத்திற்குப் பிறகு)*
*9. ஆலய தரிசனம் – வேணி மாதவர் கோவில் சர்ப்பராஜன் – வாசுகி (நாகபாசத்தில்) பீஷ்மர் அம்பு படுக்கை சயனம் – 25 அடி நீளம் அக்கரையில் ஸோமச லிங்கம், பரத்வாஜேஸ்வர் ஆலயம், அலோபி மாதா கோவில், (குண்டம் அடியில் ஸ்ரீ சக்ர தரிசனம்)*

**காசியில் செய்ய வேண்டியவை :**

*1. மஹா பிராயச்சித்த சங்கல்பம்*
*2. மணி கர்ணிகை ஸ்நானம்*
*3. தீர்த்த ஸ்ராத்தம்*
*4. பஞ்ச கங்கா தீர்த்தங்களில் சங்கல்பம், ஸ்நானம், ஹிரண்ய ஸ்ராத்தம், பிண்ட தானம், திலதர்ப்பணம்*
*5. தம்பதி பூஜை & கங்கா பூஜை*
*6. கால பைரவ சமாராதனை*
*7. ஆலய தரிசனம் – டுண்டி கணபதி, சிந்தாமணி பிள்ளையார், தண்டபாணியான யச்பதி, காசி தேவதை, கங்கை, பார்வதி, பிந்துமாதவர், விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, சப்தரிஷி பூஜை, அர்த்தஜாம பூஜை*
*8. வியாச காசி*
*9. சோழிமாதா, சங்கட விமோசன அனுமன், துளசி மானச மந்தீர், காமேஸ்வரர், தில் பரமேஸ்வரர்*
*10. காசியில் இருந்து புறப்படுவதற்கு முன் கால பைரவரை மீண்டும் தரிசித்து அவரிடம் காசி / கயா யாத்ரை நல்லவிதமாக நடத்திக் கொடுத்தற்காக நன்றி கூறி நமஸ்கரித்து விடைபெறவேண்டும்.*
*11. உறவினர் நண்பர்களுக்கு பிரசாதத்துடன் கொடுப்பதற்கு அன்னபூரணி சின்ன விக்ரஹம் மற்றும் காசிக் கயிறு (கறுப்புக்கயிறு) வாங்க வேண்டும்.*
*12. காசி விஸ்வநாதர் & விசாலாட்சி கோவிலில் கண்டிப்பாக மூன்று பிரதட்சிணம் செய்து பத்துமுறை நமஸ்காரம் செய்ய வேண்டும்.*

தொடரும்....

# “பெற்றோரைப் போற்றுவோம்”
# “பெருமை சேர்ப்போம்”

வேதபாரதியின் பிரதான நோக்கமே கலாச்சாரத்தை காப்பதுதான். ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாதமும், தமிழகத்தின் ஏதோ ஒரு பகுதியிலோ அல்லது புதுவையிலோ நமது கலாச்சாரத்தை காக்கும் விதமாகவும், போற்றும் விதமாகவும் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். இதற்கு தடையாக தற்போது “கொரோனா” என்னும் கண்ணிற்கு புலப்படாத கிருமி இருக்கிறது.

என்றாலும் , காணொளி (Zoom) மூலமாக எந்தவித இடையூறும், தடையுமின்றி பல நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறோம். இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாகவும், இளைஞர்கள், இளைஞர்களின் ஆற்றல் வெளிப்படும் விதமாகவும், புதுச்சேரி, யுவவேதபாரதியால் கடந்த 30.05.2021 ஞாயிற்றுக்கிழமையன்று ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

“பெற்றோரைப் போற்றுவோம்” – பெருமைகளை சேர்ப்போம்” என்ற தலைப்பில் நடைபெற்றஇந்த நிகழ்ச்சியில் நமது சமுதாயத்தின் இளம் தலைமுறையினர் பலர் பேசினார்கள். ஒவ்வொருவரின் பேச்சும், அவர்கள் வெளிப்படுத்திய அவர்களது கருத்தியல் விதமும் கலந்து கொண்டோரை பிரம்மிக்கச் செய்தது என்றால், அது மிகையாகாது. பெற்றோரைப் பற்றிய இன்றைய இளைஞர்களின் புரிதல் மற்றும் பெற்றோர்கள் மீதான அவர்களது மதிப்பீடு ஆச்சர்யம் அளிப்பதோடின்றி, பாரத மண்ணில் கலாச்சார நீரோட்ட ஜீவன் இன்னுமும் ஆரோக்கியமாக இருப்பது கண் முன்னே நிற்கிறது.

குறிப்பாக, காரைக்காலைச் சேர்ந்த சிரஞ்சீவி குருபிரசாத் பேசும்போது, தனக்கு தனது பெற்றோர் ஒரு முன்வடிவம் என்றும் அதையே நான் என் குழந்தைகளுக்கு எடுத்துச் செல்ல இருப்பதாகவும் குறிப்பிட்டது, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெற்றோர்களுக்கும், பார்வையாளருக்கும் நம்பிக்கையையும், நெகிழ்ச்சியையும் தந்தது.

*வேதபாரதி செயலாளர் திரு. ஆர். வெங்கட்ராமன்ஜி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மதுரை சுப்புலட்சுமி லட்சுமிபதி கல்லூரியின் பேராசிரியர் திருமதி. நீலா முரளிதரன் அவர்களும் Brightman Training நிறுவனத்தின் தலைவர் திருமதி.எஸ். பூர்ணிமா அவர்களும், கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர்.*

*யுவ வேதபாரதியின் செல்வி பி. பரிஷ்கிருதா, செல்வி. எம். பத்மஜா, செல்வன் பி. ஹரிகார்த்திக், செல்வன் சி.ஹரிஹரன், செல்வன் ஆர்.எஸ். ஆகாஷ், செல்வன் சி. கௌசிக் மற்றும் சௌ. ஸ்ரீநிதி ரமேஷ் ஆகியோர் பேசிய விதமும், அதன் பொருளும், அவர்களின் எண்ணங்களும் பெரும் நம்பிக்கையை பெற்றோர்களுக்கு தந்தன. அதேபோல் இவர்கள் பொறுப்பேற்று இந்நிகழ்வை ஒருங்கிணைத்த விதம் அற்புதம். மொத்தத்தில் கலாச்சாரத்தைப் பற்றிய நமது எதிர்கால ஏக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து பெரும் நம்பிக்கை தந்த நிகழ்ச்சியாகும்.*

*ஆதிரையன்*

**வேதபாரதி ONLINE வழியாக**

*ஸம்ஸ்க்ருத வகுப்புகள் நடைபெறுகின்றன.*

*நல் ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன், மதுரை*

**ரிக், யஜுர், ஸாம வேத வகுப்புகள் :**

**ஸந்த்யா வந்தன வகுப்குகள்** நடந்து வருகிறது.

*அத்யாபகர் : ப்ரம்ஹஸ்ரீ கைலாசநாத கனபாடிகள்*

*பொறுப்பாளர்கள் : ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ சங்கர்.*

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.

Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# சாதனைப் பறவைகள் - 2

*(சாதாரணப் பெண்களின் அசாதாரண வெற்றிக் கதைகள்)*

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## CA சிவபோகம் – பாரத தேசத்தின் முதல் பெண் தணிக்கையாளர்



*(ஜூலை மாதம், 23ம் தேதி, சிவபோகம் அம்மாவின் பிறந்தநாள். அவரது நினைவாக இந்தக் கட்டுரையின் இரண்டாம் பகுதி இடம் பெறுகிறது)*

சிவபோகம், இந்த தேசத்தின் முதல் பெண் தணிக்கையாளர் என்பது மட்டுமல்ல, அவர் ஒரு தீவிர சுதந்திரப் போராட்ட வீராங்கனையும் கூட போன்ற விவரங்களை சென்ற இதழில் பார்த்தோம். சுதந்திரத்திற்கு முன்பான அன்றைய காலகட்டத்தில் ஒரு ஆச்சாரமான குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண், சுதந்திரப் போராளியாகவும், அதற்காக சிறை சென்றவராகவும், சிறந்த பட்டயக் கணக்காளராகவும், ஆண்களுக்கு நிகராகப் பணிபுரிபவராகவும் இருப்பது என்பது எவ்வளவு கடினமானது என்று சொல்லத் தேவையில்லை. தனது இறுதி மூச்சுவரையில் பாரத தேசம் மற்றும் தனது சகோதர-சகோதரிகளின் குடும்பங்கள் ஆகிய இரண்டையும் தன் இரு கண்களாகக் கருதி வாழ்ந்து காட்டினார் சிவபோகம். சமூக சேவை, தேச சேவை, பெண்களின் உயர்கல்வி, வாழ்க்கை முன்னேற்றம் ஆகியவைகளே அவருடைய உயிர் மூச்சாக இருந்து வந்துள்ளது.

ஆங்கிலேய அரசாங்கத்தின் சட்டத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்று, 1937ம் ஆண்டு முதல், தொழில் ரீதியாகத் தனித்து செயல்படத் தொடங்கினர் என்றாலும், தான் ஏறிவந்த ஏணிப்படிகளை மறந்துவிடாமல், சாஸ்த்ரி & ஷாவில் பகுதிநேரப் பணியாளராகவும் வேலை பார்த்தார். சிவபோகத்தின் முப்பது ஆண்டு பணிகாலத்தில் ரிசர்வ் வங்கியின் தணிக்கை என்பது அவரின் ஏக போகக் கோட்டையாக இருந்துள்ளது, அவரது மனம் சமூக சேவை நிறுவனங்களுக்கு

கட்டணமில்லாத தணிக்கை செய்வதில் இருந்தது. சிவபோகம் ஒரு கடுமையான தணிக்கையாளர் என்பதையும் அவரது கையொப்பத்தை அத்தனை சுலபமாகப் பெற்றுவிட முடியாது என்பதையும், இவரை சம்மதிக்க வைப்பதற்கு முன்னணி தணிக்கையாளர்களே கூட மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது என்பதையும் இத்துறையிலுள்ள பலரும் தங்களது அனுபவத்தில் வெளிப்படுத்தியுள்ளனர். இத்துறையில் சிவபோகம் எனும் எளிமையான பெண்மணி பல சாதனைகளைப் புரிந்திருப்பது வியக்கதக்கதாகவே உள்ளது.

இந்தக் காலக்கட்டத்தில் தான் சிவபோகம், CA இறுதித்தேர்வில் சிறப்பாக தேர்ச்சி பெறும் பெண்களுக்கென **“சிவபோகம் விருது”** (LADY SIVABOGAM AWARD) என்ற மதிப்புமிக்க ஒரு விருதினை உருவாக்கினார். இந்த விருது, இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் CA படிப்பில் முதன்மை பெரும் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

சிவபோகத்தின் எளிமையும் அவருடைய சாதனைகளைவிடக் கூடுதலான கவனத்தை ஈர்த்தது. தூய தேசபக்தரான சிவபோகம், கடைசிவரை வீடுகளில் நூற்கப்பட்டு, பருத்திநூலிழைகளால் நெய்யப்பட்ட கைத்தறிப் புடவைகளையே தன் வாழ்நாள் முழுவதும் உடுத்திக் கொண்டிருந்தார். தனி மனுஷியாகவே இருந்துகொண்டு, காதி கதர் ஆடை மட்டுமே அணிந்தவராக, சிவபோகம் ஏராளமான தொண்டு நிறுவனங்களின் தணிக்கையை இலவசமாகவே செய்து கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தனிப்பட்ட முறையிலும் ஒரு சமூக சேவகியாக, பெண் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார். தணிக்கையாளர்கள் கூட்டமைப்பின் குழு உறுப்பினராகவும், சென்னை பல்கலைகழகத்தின் செனட் உறுப்பினராகவும் பெண்கள் மேம்பாட்டில் முன்னோடியான கருத்துக்களை துணிச்சலுடன் வெளிப்படுத்தவும், நடைமுறைப் படுத்தவும் தைரிய மிக்கவராகத் திகழ்ந்தார் என்பதை இவரது வாழ்க்கையில் நிகழ்ந்துள்ள பல நிகழ்வுகளிலிருந்து நாம் அறிய முடிகிறது.

பெண் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குவதில் சிவயோகம் - சிவபோகம் சகோதரிகள் சளைத்தவர்கள் இல்லை. இருவருமே,

அவர்களது தலைமுறைக்கு அடுத்த தலைமுறைக் குடும்பம் ஒவ்வொன்றின் முதல் பெண்குழந்தைகளும் கண்டிப்பாக பட்டதாரியாக வேண்டும் என்று முடிவெடுத்திருந்தார்கள். இதற்கென அவர்கள், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பெண் குழந்தை பட்டதாரியாக ஆகி இருந்தால், அந்த குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயை அன்பளிப்பாகவும் ஊக்கத் தொகையாகவும் வழங்குவதாக முடிவெடுத்து செயல்படுத்தியும் வந்தார்கள்.

கலாச்சாரம், பாரம்பர்யம் என்கிற பெயரில் இளவயது திருமணம், பெண் குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்புக்கள் மறுப்பு, ஆகிய வழக்கங்கள் தீவிரமாக இருந்த காலகட்டத்தில் அவற்றை எதிர்த்து, தொடர்ந்து படித்ததுடன் , அதுவும் கடினமான ஒரு துறைக்கல்வியைத் தேர்ந்தேடுத்து, பல சாதனைகளைப் புரிந்தும், குடும்பப் பற்றுடன், தேசப்பற்றுடன், கதர் ஆடை மட்டுமே உடுத்தும் வழக்கத்தைக் கொண்டிருந்த இவர் தான் உண்மையான பாராட்டுக்குரிய முன்மாதிரி ஆவார். பெண்கள் மேம்பாடு, பெண்களுக்கான அதிகாரம் **(Women Empowerment)** என்கிறவார்த்தை உலகளவிலும் நம் தேச அளவிலும் ஒட்டு மொத்த மனசாட்சியுடன் பேசப்படுவதற்கு முன்பாகவே, அதன் மீது உண்மையான நம்பிக்கை கொண்டிருந்தவர் சிவபோகம் அவர்கள். **CA** படிக்க விரும்பும் ஒவ்வொரு பெண்ணும் சிவபோகத்தின் வாழ்க்கை வரலாற்றைக் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**நன்றி : நைடிங்கேல்ஸ்**

தொடரும்...

STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance *Specialist*

**மருத்துவ பாலிசி உங்களை செல்வந்தராக்காது ஆனால் உங்கள் குடும்பத்தை கடனாளியாக்காமல் பாதுகாக்கும்!!!**





**மருந்துவமனை வரவேற்பறையில் சிறிது நேரம் அமர்ந்து பாருங்கள்**

**ஏன் மருத்துவ பாலிசி எடுக்க வேண்டும் என்பதற்கு பதில் கிடைக்கும்.**



**S. Narayanan - 9360277372**

# பதினெண் புராணங்கள்

**(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.ஏட்., பரமக்குடி)**

*சென்றமாத தொடர்ச்சி...*

**7. நாரதீயம் :** *சனகாதி முனிவர்களுக்கு நாரதர் கூறியதே இந்நூல்! 207 அத்யாயங்களும் 25 ஆயிரம் சுலோகங்களும் இரு அர்த்தங்களாக அனுமன் தபுராணம் இது! விஞ்ஞான ஆனந்தர் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். தலங்கள், விரதங்கள், தேவதைகளின் மந்திரம், 18 புராணச் சுருக்கம், குரு மகிமை, ருக்மாங்கதன் வரலாறு, நாரதர் சங்கீதம் பயின்றது, வேதபாதஸ்தவம், பல நீதிகள், சிராத்தம் போன்றவை இப்புராணத்ததால் விளக்கப்படுகின்றன. இதில் உள்ள பிருஹந்நாரதீயம் ஒரு 20 புராணமாகவும் உள்ளது.*

**8. ஆக்னேயம் :** *வசிஷ்ட்டருக்கு அக்னி பகவான் கூறியது இப்புராணம்! 383 அத்யாயங்களும், 15000 சுலோகங்களும், கொண்டது!.*

*இராமரைப் பற்றிய விசேஷமான தத்துவங்கள் ஆலயம் அமைக்கும் முறைகள், தேவதை, விக்ரஹப் பிரதிஷ்டை முறைகள், மருந்துகள், தனுர்வேதம், ரத்னபரீக்ஷை, மோஹன மந்திரம், மோகன ஔஷதி, எல்லா நோய்களையும் அகற்றவல்ல அபாமார் ஜனஸ்துதி, இறந்தவரை எழுப்பும் மந்திரம், தேகப்பயிற்சிகள், நாடகம், நடனம், கானம், தீனக்ஷகள், ஓம குண்டவிதிகள், இரண வைத்தியம், சிற்பம், ஸ்தபதிகளுக்கு வேண்டிய ப்ரமாணம், பாலாரிஷ்ட சாந்தி, நாடீத்வம் முதலிய அருமையான செய்திகளை இதில் காணலாம்.*

**9. பிரும்ம வைவர்த்தம் :** *இதைச் சூரிய புராணம் என்பர்! பிரும்ம, பிரகிருதி, கிருஷ்ண ஜன்ம, கணேச் என நான்கு காண்டங்களையும் 275 அத்யாயங்களையும், 18000 சுலோகங்களையும் கொண்டது இது.!*

*நாரதருக்குச் சாவர்ணி மனு இப்புராணத்தை எடுத்துரைத்தார்! பிரும்மம் உலகமாக மாறியதால் பிரும்ம வைவர்த்தம் எனக் காரணப் பெயர் பெற்றது! கிருஷ்ணன் கணேசனானது, கிருஷ்ணனின் சகோதரியாகிய ஏகநம் சாவை துர்வாசர் மணந்தது, லக்ஷ்மி விரும்பாத இடம், தலப் பெருமைகள், தீக்கனவுளும் பரிகாரங்களும் ராதையின் சரிதம், முதலியன விரிவாகக் கூறப்படுகிறது! ஜயதேவர் எழுதிய அஷ்டபதி அல்லது கீத கோவிந்தத்திற்கு இதுவே மூல நூல்! ஸேன் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்! (தொடரும்...)*

# புவனம் நலம்பெற "புவனமாதா" பிரார்த்தனை

*உலக மக்களை பெருந்துயரத்தில் ஆழ்த்தியுள்ள "கொரானா" என்னும் கண்ணுக்குப் புலப்படாத கிருமி கடந்த ஒண்ணரை ஆண்டு காலமாக தனது பேயாட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறது. ஆரம்ப காலகட்டத்தில் பெரிய அளவில் பாரத தேசத்தில் சேதாரங்கள் இல்லை. ஆனால், நோய்க் கிருமியின் இரண்டாவது அலை நமது தேசத்திற்கு பெரும் சவாலாக இருந்து வருகிறது. இன்னமும் முழுமையாக சமுதாயம் விடுபடாத நிலையில் நமது இருதயங்களுக்கு இதமான பலரை இழந்துள்ளோம்.*

*இச் சூழலுக்கு முடிவு காணும் வகையில் புவனத்தைக் காக்க வேண்டி "புவனமாதா – அருள்மிகு லலிதாம்பிகையை" பிரார்த்திக்கும் விதமாக 20.05.2021 முதல் 08.06.2021 வரை இருபத்தொரு நாட்கள் தினமும் மாலை 6.00 மணிக்கு "லலிதா சஹஸ்ரநாம பாராயணம்" அவரவர் இல்லங்களிலே செய்ய புதுச்சேரியின் "சக்தி வேதபாரதி" ஏற்பாடு செய்திருந்தது.*

*அவ்வாறே, தினமும் அவரவர் இல்லங்களில் மங்களகரமான மாலை வேளையில் தீபம் ஏற்றி "Zoom" வாயிலாக சக்திகள் (மகளிர்) ஒன்றிணைந்து தொடர்ந்து "லலிதா சஹர்நாமம்" பாராயணம் செய்தனர்.*

*திட்டமிடப்பட்ட நாட்களில் சுமார் 1108-க்கும் அதிகமான ஆவர்த்திகள் பாராயணமாயின. இந்த இருபத்தோரு நாட்களில் ஒவ்வொரு நாளும் அந்தந்த நாட்களுக்கேற்ப அதற்குரிய சுவாமிகளையும் பிரார்த்தனை செய்தனர். இதில் சமுதாயம் காக்க "கந்தர் சஷ்டி கவசம்", "லக்ஷ்மி நரசிம்மர் ஸ்தோத்ரம்", "ஆபத்பாந்தவ ஸ்தோத்ரம்", "ருண விமோசன ஸ்தோத்திரம்" போன்றவை குறிப்பிடத்தக்கது.*

*அனைவரும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி, 08.06.2021 செவ்வாய்கிழமையன்று நிறைவுற்றது. வேதபாரதி செயலாளர் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன்ஜி தலைமை தாங்க, சென்னை, திருமயிலை, மஹாமஹாபோத்யாய, ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் தர்மபத்தினி, மாதுஸ்ரீ, ஸ்ரீமதி பிரேமா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி அனைவரையும் ஆசீர்வதித்து வாழ்த்துரை வழங்கினார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் புதுச்சேரி வேதபாரதி நிர்வாகிகள் மற்றும் வேதபாரதி குடும்ப அங்கத்தினர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். இருபத்தொரு நாளும் இந்நிகழ்ச்சியை "சக்தி வேதபாரதி" நிர்வாகிகள், ஸ்ரீமதி, ஜெயஸ்ரீ வரதராஜன், ஸ்ரீமதி. பத்மாவதி பட்டாபிராமன், ஸ்ரீமதி, அபிராமி ரமேஷ் ஆகியோர் மிகச்சிறப்பாக ஒருங்கிணைந்து நடத்தினர்.*

*எல்லாம் வல்ல புவனமாதா லலிதாம்பிகை விரைவில் புவனம் காக்க பிரார்த்தனையுடன் விழா இனிதே நிறைவுற்றது.* **ஆதிரையன்**

# பசு - சர்வரோக நிவாரணி
# “சுற்று சூழல்”

நதிகளின் நீர் சுமார் 60 விழுக்காடு மாசடைந்துள்ளதாக ஆய்வறிக்கை கூறுகிறது. இது நதிகளுக்கு மட்டுமல்ல குளம், ஏரி, குட்டை, ஊரணி போன்ற அனைத்து நீர் நிலைகளுக்கும் பொருந்தும், இதற்கான காரணங்களை ஆய்வு செய்யும்போது, பன்னெடுங்காலமாக நாம் நாட்டின் மாடுகளின் மூலம் கிடைக்கப்பெறும் தொழு உரங்கள் மற்றும் தாவரங்களின் மூலம் கிடைக்கப்பெறும் தழைச் சத்து உரங்கள் ஆகியவற்றின் மூலமாக விவசாயம் செய்து வந்தோம்.

பிறகு நாட்டின மாடுகள் அழிக்கப்பட்டதால் கலப்பு மாடுகளான ஜெர்சி போன்றவைகளின் விஷத்தன்மை உள்ள தொழு உரங்கள் மற்றும் இரசாயன உரங்களை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறோம். இதன் காரணமாக பூமித்தாய் விஷத்தன்மை அடைந்து அதன் மீது பொழியும் மழை நீரும், உருண்டோடும் நீரும் தாமாகவே விஷத்தன்மை கலக்கப்பெற்று நீர் நிலைகளில் சேருகின்றன.

பொதுவாக, நீரில்லாத வற்றிய நிலையிலுள்ள கிணற்றில் பசுமூத்திரம் (கோ-ஜலம்) தொடர்ந்து ஊற்றி வந்தால், அந்த கிணற்றில் தாமாக நீர் சுரக்கத் தொடங்கும். பசு மூத்திரமானது வறண்ட கிணற்றின் பூமிக்கு உயிர் கொடுத்து கங்கையான தண்ணீரை தன்வசம் ஈர்க்கும் தன்மை கொண்டது. ஆனால், தற்போதைக்கு அதிகளவில் கலப்பின மாடுகள் இருப்பதால் இதற்கு சாத்தியமற்ற நிலையில் பல கிணறுகள் வறண்டுள்ளது.

பாரத தேசத்தில் வனங்களின் (காடுகளின்) பரப்பளவு வெகுவாக குறைந்து வருகின்றன. இதற்கு பலவிதமான காரணங்கள் உள்ளன. இதனால் புவி வெப்பமடைவதோடு சுத்தமான பிராண வாயு (ஆக்ஸிஜன்) கிடைக்காமல் தவிக்கிறோம். நாட்டின மாடுகளால் பொதுவாக காடு வளம் பெறுகிறது. நாட்டின மாடுகள் உட்கொள்ளும் உணவிலிருந்து தனது கழிவுகளான சாணத்தின் மூலம் வெளியேறும் விருட்சங்களின் விதைகள் நன்றாக நேர்த்தி செய்யப்பட்டு அதிக முளைக்கும் திறன் பெறுகிறது.

மேலும், ஓரிடத்திலிருந்து காடுகளின் பல பகுதிகளுக்கும் மாட்டுக் கழிவுகள் மூலம் விதைகள் தூவப்பட்டு காடு பெரும் வளத்தோடு வளர்ச்சி பெறுகின்றன. காடுகளின் பரப்பு பெருகவும், அடர்ந்து வளமாக தாவரங்கள் வளரவும் நாட்டின

மாடுகள் பெரும் உதவியாக இருக்கின்றன. ஆரம்ப காலங்களில் மாடுகளை மேய்ச்சலுக்கு காடுகளை நோக்கி ஓட்டிச் செல்ல அரசாங்கமே விவசாயிகளை அறிவுறுத்தின. பிறகு வந்த அரசுகள் மாடுகளினால் காடுகள் அழிவதாக காரணங்களைச் சொல்லி காட்டினுள் அனுமதிப்பதில்லை. இது ஒரு பெரும் குறையாகும்.

நீர் நிலைகள் போன்றே, விவசாய நிலங்களும் இன்றைக்கு விஷத்தன்மை அடைந்துள்ளது. இந்த நிலங்களில் விளையபெறும் உணவு தானியங்கள், பழங்கள், காய்கறிகளையே வேறு வழியின்றி நாம் உட்கொள்கிறோம். இவையே இன்றைய மனிதனின் பலஹீனத்திற்கும், அவனை ஆட்கொண்டுள்ள பல வியாதிகளுக்கும் காரணமாகிறது.

தானியங்கள் விளையும் பூமி சத்துகள் நிறைந்ததாகவும், மிருதுவான தன்மையுள்ளதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் செடிகளின் சல்லி வேர்கள் பூமியின் பல திசைகளுக்கும் சென்று மண்ணிலுள்ள தேவையான சத்துகளை வளரும் தாவரத்திற்கு தரும். “மரத்தை வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்” என்ற கிராமிய பழமொழிக்கேற்ப பயிர்த் தாவரங்களுக்குத் தேவையான சத்துக்களையும், மிருதுவான தன்மையையும் “மண்புழு” என்ற உயிரின் மூலமாகவே இயற்கையாகவே இறைவன் வழங்கினான்.

இந்த “மண் புழுக்கள்” பூமியின் அடியில் வசிப்பவை. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணிப்பதன் மூலமாக மண்ணின் தன்மையை மிருதுவாக்குகின்றன. மேலும் இவற்றின் கழிவுகள் வளரும் பயிர்களுக்கு ஊட்டமான சத்துகளாக உள்ளன. ஆனால், இந்த மண்புழுக்களுக்கு பிரதான உணவு மாடுகளின் சாணம்தான். கலப்பின “ஜெர்சி” மாடுகளின் விஷத்தன்மை நிறைந்த சாணம் மற்றும் இரசாயண உரங்கள் ஆகியவற்றால் மண் புழுக்கள் கிட்டத்தட்ட முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டன. எந்தநோக்கத்திற்காக ஆங்கிலேயர்கள் நமது பாரம்பரிய நாட்டு மாடுகளை திட்டமிட்டு அழிக்கத் தொடங்கினானோ, அது கிட்டத்தட்ட நிறைவேறியுள்ளது.

நாட்டின மாடுகளின் அழிவுகளால், பூமித்தாய், காற்று, நீர் என உயிர் வாழ்வதற்கு ஆதாரமானவைகள் அனைத்தும் பாதி மரணத்தை அடைந்துவிட்டன. தற்போது மீதமுள்ளவற்றை காப்பாற்ற வேண்டிய கடமையுடன் கூடிய பொறுப்பில் நாம் உள்ளோம். - **ஆதிரையன்**

# புரோஹிதர்
## பண்முகம்

*பொதுவாக புரோகிதர்கள் என்றால், அவர்கள் நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுப்பவர்கள் என்று தான் அறிமுகம் அறிகிறார்கள். ஆனால் அவர்கள், பண்முகத் தன்மை கொண்டவர்கள். உழைப்பதில் இவர்களுக்கு நிகர் இவர்களே. அதிகாலை துயில் எழுந்து அவரவர்களின நித்யக் கர்மாவான சந்த்யாவந்தனம் முதலான பூஜைகளை முடித்துவிட்டு தங்கள் பணியை தொடங்கி இரவு உறக்கத்திற்கு செல்லும் வரையிலும் ஓய்வின்றி உழைப்பவர்கள்.*

*கிராமத்தில் மற்ற குடிமக்களுக்கு இணையாக, சில நேரங்களில் அவர்களைவிடவும் சிறப்பாக விவசாயம் செய்வதில் வல்லவர்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு சிறு அளவு நிலத்தைக் கொடுத்து, அந்த வருவாயை ஆதாரமாகக் கொண்டு கிராமத்திலுள்ள ஏழை எளிய மக்கள் முதல் செல்வந்தர்கள் வரை வருமான எதிர்பார்ப்பின்றி அவரவர் இல்லங்களில் நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுக்கவும், மக்களை நெறிப்படுத்தி நல்வழிகாட்டவும் கிராமங்கள்தோறும் அரசர்களால் அமர்த்தப்பட்டவர்கள் புரோகிதர்கள்.*

*புரோகிதர்களின் கடும் உழைப்பினாலும், தியாகச் செயல்பாடுகளினாலும் செம்மையாக விவசாயம் செய்து தங்கள் விவசாய நிலங்களை அதன் வருமானத்தின் மூலம் பெருக்கிகொண்டனர். தாங்கள் வசிக்கும் கிராமங்களில் விவசாயம் நிலங்கள் இல்லாத புரோகிதர்களே கிடையாது எனலாம். இன்றைக்கும்கூட பல கிராமங்களில் விவசாயம் செய்து வருகின்றனர். ஆனால், பன்னெடுங்காலமாக இவர்கள் வடதமிழகத்தின் பெரும்பாலான, கிட்டத்தட்ட அனைத்து கிராமங்களிலும் வசித்து வந்தனர். பிறகு தமிழக அரசியல் மாற்றங்கள் காரணமாக பல கிராமங்களில் புரோகிதர்களே இல்லை என்ற நிலையும், பல கிராமங்களில் விவசாயம் சார்ந்த நிலங்கள் இழந்த நிலையிலும் இன்றைக்கு பல புரோகித குடும்பங்கள் இருப்பது மிகவும் துரதிஷ்டவசமானது.*

*தலையில் முண்டாசுக் கட்டிக் கொண்டு விவசாய பூமியில் இறங்கிவிட்டால் மண்வெட்டி பிடிப்பதிலிருந்து, தழை வண்டி ஓட்டுவது வரையில், அது சேறு நிறைந்த நஞ்சை வள நிலமானாலும் சரி, கடினத் தன்மையுடைய புஞ்சைவள நிலமானாலும் சரி பயிர் செய்வதற்கு நிலத்தை தயார் செய்வதில் எந்த ஒரு பரம்பரை விவசாயிக்கும் இவர்கள் சளைத்தவர்கள் இல்லை. ஏனெனில், இவர்கள் பரம்பரை புரோகிதர்கள் மட்டுமல்ல பரம்பரை விவசாயிகளும்கூட. உயிர்களுக்கு ஆதாரமான உணவு தானிய உற்பத்தி செய்து தரும் நிலத்தில் இறங்குமுன் பூமியை தொட்டு வணங்கிவிட்டுதான் தன் பணியை தொடங்குவர். வீட்டிலிருந்து*

*தனது விவசாய பூமியை அடைய பலரது விவசாய நிலங்கள் வழியாக செல்ல வேண்டும், அப்படி செல்லும்போது காலணியை வீட்டிலேயே விட்டுவிட்டு வெறும் காலோடுதான் செல்வார்கள். உயிர்களுக்கு உணவளிக்கும் பூமித்தாயை போற்றி வணங்கி வந்தோம். இன்றைக்கு பலர் பூட் காலோடுதான் விவசாய நிலங்களுக்கு செல்கின்றனர். நாகரீகம் என்ற பெயரில் நம்மை நாமே தாழ்த்தி வரும் செயல்பாடுகளில் இதுவும் ஒன்று.*

*நாற்றங்கால் தயார் செய்வது, அதற்கு முன்பாக நாற்று விடுவதற்கு நெல்லை மூட்டையாக கட்டி முளைப்பதற்காக நீர் நிலைகளில் போடுவது, நடவிற்காக சேற்று நிலம் தயார் செய்வது, அடியுரமாக மாட்டு தொழு உரத்தோடு தழையுரம் இடுவது, தழையுரத்திற்கு மரங்களில் தழைகளை விவசாய பூமியின் மண் தன்மைக்கேற்ப தேர்ந்தெடுப்பது (அதாவது எந்தெந்த மரத்தின் தழைகளை எந்தெந்த பூமிக்கு கொடுக்கலாம் என சரியாக தேர்வு செய்வது) என விவசாயத்தின் ஒவ்வொருப் பணிகளில் தேர்ந்தவர்கள் மற்றும் மற்றவர்களுக்கும் வழிகாட்டிகள் புரோகிதர்கள். நஞ்சையைப் போன்றே புஞ்சை நிலங்களில், கம்பு, சோளம், துவரை போன்றசிறு தானியங்கள் முதல் வேர்க்கடலை, எள்ளு போன்றபணப்பயிர் வரை ஒவ்வொன்றும் எப்படி விளைவிக்க வேண்டும், எந்தப் பட்டத்தில் (அதாவது Season) எந்த பயிர் நல்ல மகசூலைத் தரும் என ஒவ்வொன்றையும் நுட்பமாக செய்யும் திறன் பெற்றவர்கள்.*

*இன்றைக்கு விவசாயப் பயிரைத் தாக்கும் பூச்சிகளை கொல்வதற்கு விஞ்ஞான வளர்ச்சியின் வெளிப்பாடாக "பூச்சிக்கொல்லி" மருந்துகளை பயன்படுத்துகிறோம். ஆனால், நமது பாரம்பரிய விவசாய முறைதர்மம் சார்ந்தது, அதனடிப்படையில் பயிர்களை தாக்குகின்றபூச்சிகளை அழிக்காமல் அதனை விரட்டி வந்தனர் நம் முன்னோர்கள். இதற்கு பூச்சிவிரட்டி என்று பெயர். அந்தப் பூச்சி விரட்டியை இயற்கையாக, வேப்ப மரத்தின் தழை, அதன் புண்ணாக்கு எண்ணெய், பாரம்பரிய நாட்டு மாடுகளின் சிறுநீர் (கோஜலம்) சாணம் (கோமயம்) ஆகியவற்றைக் கொண்டு தயாரிப்பார்கள். இந்த தயாரிப்பை செய்வதிலும் புரோகிதர்கள் வல்லவர்களே.*

*விவசாயமே, கல்வி, கால்நடை வளர்ப்பு, இறைவழிபாடு, கலைக் கல்வி, நமது வாழ்க்கை முறை, நமது மொழி என ஒன்றோடொன்று தர்ம சிந்தனையோடும், தயை குணத்தின் ஓட்டத்தோடு பின்னிப் பிணைந்து நமது பாரம்பரியமும், கலாச்சாரமும், இதற்கு கிராம அளவில் அனைவரையும் ஒருங்கிணைத்து வழிநடத்தும் பணியை பன்னெடுங்காலமாக தியாக சிந்தனையோடு செய்து வருபவர்கள் புரோகிதர்கள். பிணைக்கப்பட்ட பாரம்பரிய சங்கிலியை உடைக்கத் தொடங்கியதன் விளைவே இன்றைய சமுதாய சீரழிவு.*

**- ஆதிரையன்**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms,
Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு, வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கெட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்திற்கோ / அலுவலகத்திற்கோ வந்தடையும்.

CUB

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், எளியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th July 2021




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ் A/c

297,298, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829
78, ஈஸ்வரன் கோவில் வீதி, [illegible] விநாயகர் கோவில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்
7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

---

---

---

---

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.